நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 3 | (16.3.94) | புதன்கிழமை | ஓசை 26

## சிறிலங்கா கடற்படைக்கு மேலும் ஒரு தரையிறக்கும் கப்பல்

சிறிலங்கா கடற்படைக்கு மற்றுமொரு படைகளை தரையிறக்கும் கப்பல் கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் தளத்தில் உருவாகி வருவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. 34 மீற்றர் நீளமான இத்தரையிறக்கும் கப்பல் கடந்த நவம்பரில் இருந்து கட்டப்பட்டு வருகிறது. இது ஏப்ரல் இறுதிப் பகுதியில் கடற்படையிடம் ஒப்படைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. சிறிலங்கா கடற்படையிடம் ஏற்கனவே சிங்கப்பூர் தயாரிப்பான சிறிய தரையிறக்கும் கப்பல் எஸ். எல். என். எஸ். (6ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் ஓர் இனத்தின் வீரத்தலைவர்; இந்தியா புலிகளை அணுக வேண்டும்

## முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்சிற்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு தனியாட்சிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையில் இருந்து ஒரு இன மக்களின் வீரத் தலைவராக தன்னை மாற்றிக் கொண்டு விட்டார். இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிற் தெரிவித்துள்ளார். இந்து பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் மேலும் அவர் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளுடன் இந்தியா உறவுகளை மீள ஆரம்பித்து பேச்சுவார்த்தைக்கான பாதையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இக்கட்டுரையின் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ்ப்பாணத்திற்குச் சென்ற சர்வோதய அமைப்பின் தலைவர் டாக்டர் ஆரியரட்ண விடுதலைப்புலிகள் அமைப்பின் இரண்டாவது மட்டத்தலைவர் கரிகாலனின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்தியொன்றைக் கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளார். இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான விடுதலைப்புலிகள் அமைப்பின் விருப்பத்தைத் தெரிவிக்கும் செய்தியே இந்த ஒலிப்பதிவு நாடாவில் அடங்கியிருந்தது. இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் கொண்டு வருவதற்காக கடந்த ஏழு வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மத்தியஸ்த முயற்சிகளின் ஒரு பகுதியே ஆரியரட்ணவின் விஜயமாகும்.

இதேவேளையில் வன்முறைகள் நாட்டின் நிலைமைகளுக்கேற்ப கூடிக்குறைந்து ஒரு சக்கரம்போல சுற்றிக்கொண்டுள்ளது. ஒரு பக்கத்தில் பல பொருள்படும்படியான இலங்கை அரசாங்கத்தின் போக்கும் மறுபக்கத்தில் தனது அபிலாசைகளுக்காக விடுதலைப்புலிகளுடைய உறுதிப்பாடும் உள்ளது;



தாற்பரியம் உள்ள ஒரு பகுதியாகவே தொடர்ந்தும் உள்ளது எனவே இலங்கைச் சம்பவங்களை குறிப்பாக பிரேமதாசா காலச்சம்பவங்களையும் அவரது கொடூரமானபடுகொலையின்

## இந்தியாவைப் பொறுத்து

## எறிகணை வீச்சிற்கு நால்வர் உடல் சிதறிப் பலி

### யாழ். நகர்ப்பகுதியில் கோரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்கு நான்கு அப்பாவி பொதுமக்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தின்போது இராசாவின் தோட்டப் பகுதியில் விழ்ந்து வெடித்த எறிகணைக்கு அதே இடத்தைச்சேர்ந்த பரந்தாமன் இந்திராணி (வயது 50), பரந்தாமன் கௌரி (வயது 18) ஆகிய ஒரே குடும்பத்தவர்களான தாயும் மகளும் மற்றும் இவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்த சுப்பிரமணியம் வீதி, அரியாலையைச் சேர்ந்த சுந்தரம் யோகசுந்தரம் (வயது 50) என்பவரும், வீதியால் சென்றுகொண்டிருந்த 257, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சூசைப்பிள்ளை மேசேஸ் பிலேந்திரன் (வயது 52) ஆகிய நால்வருமே பலியானவர்களாவர் இவ் எறிகணைக்குப் பலியான பரந்தாமன் இந்திராணி என்பவரின் தாயார் சின்னம்மா என்பவர் காயமடைந்தார்.

இதேவேளை பமீசால் வீதியில் வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்றிற்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்களான கறுப்பையா செல்லமணி (வயது 36), வேலன் வடிவேல் (வயது 50) ஆகிய இருவரும் காயமடைந்தனர். இவர்களுள் கறுப்பையா செல்லமணி என்பவர் படுகாயமடைந்துள்ளார். இவர்கள் இருவரது வீடுகளும் சேதமடைந்துள்ளன; இப்பகுதியில் உள்ள மீனாட்சி அம்மன் கோவிலடியில் வீழ் (6ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினையை தீர்க்க திட்டம்

## இந்தியாவைப் பொறுத்து முக்கியமான பிரச்சினையே

இந்தச் சம்பவங்களை இந்தியா எவ்வாறு அணுக வேண்டும்? அண்மைக் காலச் சம்பவங்களை ஆய்வுசெய்யும் போது இந்தியாவினுடைய பிரதிபலிப்பு மூன்று நேர அட்டவணைகளைக் கொண்டதாக வரையறுக்கப்படலாம். 1983 முதல் 1987 வரை இந்தியாவின் பங்களிப்பு தீவிரமானதாக இருந்தது. ஒரு மத்தியஸ்தராகக்கூட இந்தியா செயற்பட்டது இதனுடைய முயற்சி 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமும் இந்திய அமைதிப்படையைக் கொண்டுவந்ததன் மூலமும் உச்சக்கட்டத்தையடைந்தது.

1987 முதல் 1990 வரை இந்தியா இலங்கையின் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு நிர்வாகியாகியது 1990 இல் இலங்கைப் பிரச்சினையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வி. பி. சிங் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. 1990 மார்ச்சில் இந்தியப்படை வெளியேற்றப்பட்ட தினத்திலிருந்து இன்று வரை இந்தப் பிரச்சினையிலிருந்து இந்தியா பிரிவுபட்டிருந்தாலும் ஒரு அக்கறையுள்ள அவதானியாக இருந்துவருகின்றது.

இலங்கைப் பிரச்சினை சர்வதேச உணர்வுகளில் பெரிதாகத் தோன்றாதபோதிலும் கூட இது பிரச்சினையும் பதற்ற நிலையும் உள்ள ஒரு பகுதியாகவே உள்ளது. இது பொதுவாக தெற்காசியாவுக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் தாற்பரியம் உள்ள ஒரு பகுதியாகவே தொடர்ந்தும் உள்ளது எனவே இலங்கைச் சம்பவங்களை குறிப்பாக பிரேமதாசா காலச்சம்பவங்களையும் அவரது கொடூரமானபடுகொலையின் பின்னரான சம்பவங்களையும் ஆராய்வது அவசியமானது

## கூட்டணி, ஈ·பி·ஆர்·எல்· எவ் பொருத்தப்பாடு அற்றவர்கள்

இலங்கை நிலைமையிற் பாரிய அளவிலான மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. முதலில் தமிழ் அரசியலின் போக்கைப் பார்ப்போம்; ஜனநாயக நீரோட்ட நடவடிக்கைகளிற் பங்குபற்றுபவராக இருப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எப் அமைப்பும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தம்முடைய பதவிக்கால முயற்சிகளைத் தொடர்ந்த அதே வேளையில் தமிழர்களுடைய அபிலாஷைகள் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்படாத ஒரு நிலையில் இவர்கள் பொருத்தமற்றவர்களாகியுள்ளனர்;

இதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஒரு நம்பிக்கையான வகையில் பதிலான சைகைகள் எதுவும் வரவில்லை. 1989க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலத்தில் ஈ. பி. ஆர். எல். எப், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தலைமைகள் வன்முறை ரீதியாக ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள், வடக்கு - கிழக்

(5ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு வகுத்துள்ளது

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் வடக்கு, கிழக்குப் பிரச்சினையை கையாளும் திட்டத்தை பாதுகாப்பு அமைச்சு வகுத்துள்ளது. தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்; இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களின்பின் நேற்று நடைபெற்ற நாட்டின் பாதுகாப்பு நிலைகுறித்த செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் குலதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இச்செய்தியாளர் மாநாட்டிற்கு முதல்முறையாக தகவல்துறையமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலைமை தாங்கினார். செய்தியாளர் மாநாட்டிற்கு வெளிநாட்டு தூதரகப் பிரதிநிதிகள் பலரும் சமுகமளித்திருந்தனர், வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர்களும் கலந்துகொண்டனர்

அவர் மேலும் கூறுகையில்;

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு; அரசிடம் கொள்கை கிடையாது!

### பி.பி.ஸி செய்தியாளர்

(கொழும்பு)

பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்படும் என கூறும் அரசாங்கம் இதனை இராணுவ ரீதியாகவா அல்லது அரசியல் ரீதியாகவா தீர்ப்பது என்றஒரு முடிவுக்குவர முடியாமல் முன்னுக்குப் பின் முரணான கருத்தை தெரிவிப்பதாக பி.பி.ஸியின் சிங்கள சேவையின் கொழும்பு செய்தியாளர் அரசாங்கத்தைச் சாடினார்;

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு அவர் குற்றம் சாட்டினார். மேலும் அவர் ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வு காணப்படும் என சிறிலங்காவின் அரசு பிரதிநிதி அறிவித்துள்ளார். ஆனால் இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை இது பயங்கரவாதப் பிரச்சினையே என அரசாங்கம் தெரிவித்துவருகின்றது. பயங்கரவாதப் பிரச்சினை என்றால் ஏன் அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் எனவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சீன ஆயுதக்களஞ்சிய விவகாரம் இந்திய தலையீட்டை உருவாக்கும்

### கொழும்புப் பத்திரிகை தெரிவிக்கிறது

(கொழும்பு)

சீனாவின் இராணுவ ஆயுத உற்பத்தி நிறுவனமான 'நொறின்கோ' நிறுவனத்தின் களஞ்சியத்தை சிறிலங்காவில் அமைக்க சிறிலங்கா அரசு அனுமதியளிக்கும் பட்சத்தில் இந்தியாவின் கவனம் மீண்டும் சிறிலங்கா மீது திரும்புவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது;

இது குறித்து அப்பத்திரிகை மேலும் கருத்து தெரிவிக்கையில் இந்தியா தனது பிராந்திய நாட்டு நலன்களை பாதுகாக்கவே விரும்புகின்றது. சீனா நட்புறவு நாடாக இருப்பினும் இந்தியா சீனாவின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிக்கின்றது.

சிறிலங்கா அரசு இவ்வாறு சீன ஆயுத நிறுவனங்களை நாட்டிற்குள் அனுமதிப்பது இந்திய அரசு மீண்டும் இனப் பிரச்சினையில் 'கரிசனை' காட்டவைக்கும் என தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்; சீனாவுக்கு சிறிலங்காவில் ஆயுதக்களஞ்சிய சாலை அமைக்க அனுமதி வழங்கினால் சிறிலங்கா இந்திய உறவுகள் மீண்டும் பாதிப்படையலாம்.

அண்மையில் சீன உதவிப் பிரதமரின் சிறிலங்கா விஜய

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பொலிசாருக்கு கூடுதல் போர் பயிற்சி

### புலிகளின் தாக்குதல் எதிரொலி

(கொழும்பு)

மன்னார் தீவினுள் ஊடுருவி விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தியதையடுத்து அப்பகுதியில் இராணுவமும், பொலிசாரும் வீடுவீடாக சோதனை நடத்தி வருகின்றனர்.

இதேசமயம் புலிகளின் இத்தாக்குதல்களை தொடர்ந்து கடந்தவாரம் இராணுவத்தின் இரண்டாவது பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரி மேஜர்

(6 ஆம் பக்கம் பார்கக)

## வீரச்சாவு



2-ம் லெப். கந்தசாமி

யாழ்; மாவட்டத்தில் நேற்றுக் காலை 6-30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்,

வீரச்சாவடைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் மரணம் கொலை என சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

சோதீவுக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது இப்பெண் கொலை செய்யப்பட்டு மேற்படி பகுதியில் சடலமாகப் போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது

இச்சடலம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த சி.சிவசக்தி (வயது 26) என்ற பெண்ணினுடையது என்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இச்சடலம் இப்பெண்ணின் உறவினர்களிடம் தற்பொழுது கையளிக்கப்பட்டுள்ளது

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இறுதியாண்டு மாணவியான இவரது மரணம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன

இம்மரணம் தொடர்பான புலன்விசாரணையில் தமிழீழக் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர் இவ் விசாரணைக்காக பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மருத்துவ அறிக்கை ஆகியவை பெற்றுக்கொள்ளப்பட்டு நுணுக்கமாக ஆராயப்பட்டுவருவதாக தெரியவருகிறது

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வரி விளம்பரம்

## மசன் கன்றுகள் விற்பனைக்கு

ரூபா 10/- மட்டுமே; சொற் பனவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD; No- 14, Seenier Lane, Jaffna- (சி-8816)

## இறைச்சிக்கோழி

இறைச்சி கோழிகள் எந் நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும், உங்கள் கோழிகளை சந்தைப்படுத்தவும் சுவைமருவி கோழிப் பண்ணை மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-8799)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலன் பிறவுண் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகா பதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7738)

## என்றும் எமக்கு மரணமில்லை

தாய்நாடு காக்கும் போரில் (1941-1945) பங்குபற்றி உயிர்நீத்த சோவியத் கவிஞர் களின் கவிதைகள் விற்பனை யாகிறது, யாழ்- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலை. (7745)

## தேவை

நோயாளி தள்ளுகதிரை தேவை: வைத்திருப்பவர்கள் நேரிலோ கடிதமூலமோ உடன் தொடர்பு கொள்ள வும்: செ- இன்னராஜா 14/1, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பா ணம்- (7754)

## தவறிவிட்டது

12-03-94 அன்று இன்னத் தம்பி இராமலிங்கம் என்பவருடைய மூக்குக்கண்ணாடி யும், அடையாள அட்டை யும் (230620350V) ஆலங் கேணி கடற்கரையில் தவறி விட்டன; கண்டெடுத்தவர் கள் ஈழநாதம் காரியாலயத் தில் ஒப்படைக்கவும். சன்மா னம் வழங்கப்படும். (7753)

## தவறிவிட்டது

கடந்த 10-3-94 சிவராத் திரி தினத்தன்று கிளாலியி லிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் ஆலங்கேணிக்கும் பளைக்கும் இடையில் கொழும்பு முகவரியிடப்பட்ட பட்டமளிப்பு வைபவத்தில்

வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான பயண அனுமதி விண்ணப்பப் படிவங்களும், குடும்ப அட்டை விண்ணப்பப் படிவமும் பெற்றுக் கொள்ளும் இடங்களை பொது மக்களின் வசதி கருதி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

### வலிகாமத்தில் பெற்றுக் கொள்ளும் இடங்கள்

| | கடையின் பெயர் | கடையின் முகவரி |
|---|---|---|
| 01) | பழைய பஸ்தரிப்பு நிலைய வைரவ கோயில் முன்பாக, பேப்பர் கடை யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம்; |
| 02) | அறிவகம் புத்தகசாலை | மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்; |
| 03) | செல்வம் ஸ்ரோர்ஸ் | திருநெல்வேலிச் சந்தி; |
| 04) | மயூரா மருந்தகம் | திருநெல்வேலிச் சந்தி. |
| 05) | மகேந்திரன் ஸ்ரோர்ஸ் | பொற்பதி வீதி, கொக்குவில், |
| 06) | இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் | சுன்னாகம் சந்தி; |
| 07) | அருள் அன்ரன் பிறதஸ் | காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் சந்தி; |
| 08) | இரத்தினம் சுவீற் கவுஸ் | மல்லாகம் சந்தி; |
| 09) | S R.P; ஸ்ரோர்ஸ் | சங்கானை; |
| 10) | ஜீவன் ஸ்ரோர்ஸ் | மானிப்பாய். |
| 11) | லோகிதன் ஸ்ரோர்ஸ் | நீர்வேலி தெற்கு, நீர்வேலி; |
| 12) | லிங்கம் ஸ்ரோர்ஸ் | நீர்வேலிச் சந்தி; |
| 13) | உதவும் கரங்கள் | கிளை 3, அச்செழு; |
| 14) | பேப்பர் கடை | கோப்பாய் சந்தி. |
| 15) | தனபாலசிங்கம் வர்த்தக நிலையம் | உரும்பிராய்ச் சந்தி; |
| 16) | மணியம் ஸ்ரோர்ஸ் | மானிப்பாய் வீதி, உடுவில்; |
| 17) | நிரோ ஸ்ரோர்ஸ் | சண்டிலிப்பாய் சந்தி; |
| 18) | இரட்ணம் ஸ்ரோர்ஸ் | சுழிபுரம். |
| 19) | ஞானம் புத்தகசாலை | காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி. |
| 20) | இராஜா ஸ்ரோர்ஸ் | காங்கேசன்துறை வீதி, குளப்பிட்டி. |
| 21) | நாதன் மருந்தகம் | பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு; |
| 22) | சிறீசந் புத்தகசாலை | பருத்தித்துறை வீதி, நல்லூர். |
| 23) | ஐயர் கடை | 92, கொழும்புத்துறை, |
| 24) | பகலவன் ஸ்ரோர்ஸ் | 494, அரியாலை, |
| 25) | ஐங்கரன் மருந்தகம் | அராலி. |
| 26) | அம்பாள் புடவையகம் | பருத்தித்துறை வீதி, புத்தூர். |

### தென்மராட்சி

| | கடையின் பெயர் | கடையின் முகவரி |
|---|---|---|
| 01) | R P.N. மாமா கூல்பார் | சாவகச்சேரி. |
| 02) | சிவசக்தி களஞ்சியம் | கைதடிச் சந்தி; |
| 03) | யோகாஸ் கபே | எழுதுமட்டுவாள்; |
| 04) | அருள் நாயகம் புத்தகசாலை | கொடிகாமம்; |

### வடமராட்சி

| | கடையின் பெயர் | கடையின் முகவரி |
|---|---|---|
| 01) | சாந்தி ஸ்ரோர்ஸ் | உடுப்பிட்டிச் சந்தி, |
| 02) | கலைச்சோலை புத்தக நிலையம் | வல்வெட்டித்துறை. |
| 03) | பதுவலை | கடற்கரை வீதி, பொலிகண்டி; |
| 04) | வெற்றி சைக்கிள் வேக்ஸ் | பருத்தித்துறை. |
| 05) | சாந்தி ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை; |
| 06) | நவீன களஞ்சியம் | நெல்லியடிச் சந்தி, |
| 07) | சாயிகிருஸ்ணா ஸ்ரோர்ஸ் | வதிரிச் சந்தி; |
| 08) | அருள் கடை | நாகர் கோயில், |
| 09) | வி. ரி. மோட்டோர்ஸ் | அச்சுவேலி. |

## இப்படியும் மோதல்

(வடமராட்சி)

மதுபோதையின் போது ஒருவருக்கு ஒருவர் மீது ஏற்பட்ட வாக்குவாதம் ஒருவரது கண்ணையும் மற்றவரது உதட்டையும் காயப்படுத்தியது இவர்கள் இருவரும் உதட்டையும் கண்ணையும் கடித்து காயப்படுத்தினர்.

இச்சம்பவம் ஆழியவளை அகதிகள் முகாமில் கடந்த 12ஆம் திகதி நடந்தது. இது சம்பந்தமாக இருவரும் நாகர் கோயில் காவல்துறையில் புகார் செய்துள்ளனர்;

காயங்களுக்கு இலக்கான இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தனர். (யோ)

## தொழில்நுட்ப கல்லூரி பரீட்சை

(கொழும்பு)

தொழில் நுட்பக் கல்லூரியின் ஆண்டு இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் நடைபெற இருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாகவும் இம்மாத இறுதிக்குள் இவ் ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

## அடையாளம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமநாதன்வீதியில் சிறியதொகை பணத்துடன் மணிபேஸ் ஒன்றை மண்கும்பானைச் சேர்ந்த தனபாலசிங்கம் என்பவர் கண்டெடுத்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்; இதை உரியவர் அடையாளம் காட்டி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்; (88)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15.03.94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1871

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

27-2088, 43-8681, 26-9626, 26-5202, 24-6944, 28-0429, 26-1791, 22-6922, 27-1542, 27-5845, 40-2394, 41-9105, 28-8444, 26-1461, 24-6110;

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-3964, 28-4255, 28-6640, 24-6941, 41-9659, 40-7299, 26-0525, 42-2355, 42-7381, 26-2297, 26-4510, 42-3339, 41-7273, 41-9038, 24-5734, 26-2421, 42-2364, 41-6296, 28-2511, 28-4701, 26-9745, 26-3473, 24-6475.

## நன்றிகள்

யாழ். கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாட்டிற்கு விளம்பர அன்பளிப்புச் செய்த விற்பனை நிலையங்கள், நிறுவனங்கள், சிறப்பிதழ், செய்திகள் பிரசுரித்த ஈழநாதம், உதயன், ஈழநாடு பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஆகியோர்க்கு அன்பார்ந்த நன்றிகள்;

பொதுமக்கள் தொடர்புக்குழு மேய்ப்புப்பணி மகாநாடு.

## வாழ்த்துவோர்

பிராங் எம்போரியம், 16 (38) கஸ்தூரியார் றோட்,
எக்ஸ். டீ. மொறாயஸ், 50, மணிக்கூட்டு வீதி,
ஞானம்ஸ் ஸ்ருடியோ,
எஸ். சவிரிமுத்து. 73, கே. கே. எஸ்; றோட்,
ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ், 61, பெரியகடை,
சவுண்ட் என்ஜினியர்ஸ், 194, ஆஸ்பத்திரி வீதி,
ஏ. ஜே. எம். புடவை மாளிகை, 147, நவீன சந்தை,
கல்யாணி, 192, ஆஸ்பத்திரி வீதி,
மறைக்கல்வி நடு நிலையம்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்;

(சி-8848)

## நினைவு கூருகின்றோம்...

### 1994-03.16

1986ஆம் ஆண்டு கிளி-பரடிப்போககுச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

பரன் (வேலுப்பிள்ளை தர்மலிங்கம்- 3-ம்வட்டாரம், தண்ணீரூற்று -முல்லைத்தீவு)

யாழ்- அச்சுவேலி, வளலாய்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சங்கர் (பாலகிருஷ்ணன் சந்திரசேகரி - புலோலி மேற்கு, தம்பசிட்டி-பருத்தித்துறை)

1987ஆம் ஆண்டு அம்பாறை - சவுடாப்பிட்டிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப். ரவி (-தேவராஜ் - அக்கரைப்பற்று- 07 - அம்பாறை)

மணலாறு - புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது பயிற்சி முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு இலக்கம் | - | 02112 |
| 2 ஆம் பரிசு இலக்கம் | - | 08812 |
| 3 ஆம் பரிசு இலக்கம் | - | 00416 |
| 4 ஆம் பரிசு இலக்கம் | - | 00005 |
| 5 ஆம் பரிசு இலக்கம் | - | 15395 |

## கடை தேவை

"கோமாம்" சித்த மருந்து விற்பனவு நிலையம் நடாத்துப் பிரதான வீதி- மானிப்பாய், உடுவில் பகுதிகளில் கடை தேவைப்படுகிறது.

வாடகை விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்

பொது முகாமையாளர்,

வலிகாமம் ஜனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

கொழும்பு முகவரியிடப்பட்ட பட்டமளிப்பு வைபவத்தில் எடுக்கப்பட்ட இரண்டு படங்கள் அடங்கிய வெள்ளைக் கவர் ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7752)

## இன்றைய நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிரதேசச் செயலர் திரு. கனகரத்னம் தலைமையில் மேற்படி பிரதேசச் செயலகத்தில் நடைபெறும்.

மற்றும் கரவெட்டி பிரதேசச் செயலர் பிரிவு கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இதில் 32 கழகங்கள் பங்குபற்றுகின்றன. இதன் போது மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியனவும் இடம்பெறும். (லோ)

## நீமியா இயற்கை உரம்

வதிவிட வேளாண்மையில் நீமியா உரம் கை கொடுக்கிறது; இரசாயனக் கலப்பற்றது. மண்ணின் வளத்தைப் பெருக்கி அமோக விளைச்சலைத் தருகிறது. பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது; யாழ்; நகரில், மின்சார நிலைய வீதியில் ''லங்கெம்'' ஸ்தாபனத்திலும், மற்றும் விவசாய விற்பனைப் பொருள் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம், ஒரு கிலோ பக்கற் ரூ. 17 மட்டுமே- 20 கிலோ பொதி ரூ- 300- ''மிக்கலைற்''- (சி-8843)

4 ஆம் பரிசு இலக்கம் - 00005
5 ஆம் பரிசு இலக்கம் - 15395

### ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 01. 13510 | 06. 14493 |
| 02; 11360 | 07; 03062 |
| 03. 00495 | 08; 04002 |
| 04; 05168 | 09; 13720 |
| 05. 05506 | 10; 06886 |

பரிசுப் பொருட்களை 31-03-94 க்குமுன் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தலைவர் (சி-8846) செயலாளர்

## பிரிவுபசார விழாவும் விருந்தும்
### பேராசிரியர் அ. துரைராஜா
துணைவேந்தர்

1994-03-26 மாலை 5-00 மணிக்கு மேற்படி நிகழ்ச்சி யாழ்; பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது; பங்குபற்ற விரும்புவோர் பல்கலைக்கழக பதிவாளருடன் 1994-03-18 மாலை 3-00 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்;

பேராசிரியர் துரைராஜா அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள அறக்கொடைப் புலமைப் பரிசிலுக்கு நிதிவழங்க விரும்புவோர் அதற்கான நிதியினைப் பதிவாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பதிவாளர்

யாழ்; பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்;
1994-03-11 (சி-8844)

கொத்தணி.
நடுவப் பணியகம்,
மானிப்பாய்;
(சி-8845)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



1993-12-17 அன்று பூநகரியில் மாவீரனாய் மடிந்த

### கப்டன் ஜெகதீசன் (டாணியல்)
மகேந்திரராசா அருள்மாறன் (சுட்டா)

மலர்வு: 12-05-1972 வீரச்சாவு: 17-12-1993

டாணியல்;..;
நீ
மரித்துவிடவில்லை
மலர்வதற்காய்
மறைந்துகொண்டாய்

மரணம்!
உன்னைக் கண்டு
மரணித்துவிட்டதனால்
நீ என்னும்
மாண்டுவிடவில்லை

அஸ்தமனம்;.;
உதயத்தின்
ஆரம்பம்தான்
அதனால்
நீ என்னும்
மரணித்து விடவில்லை

தாய்
இருந்தும்
சுதந்திரத்திற்காய்
பூமித்தாய்
உன்னை
தத்தெடுத்து
கொண்டதனால்
நீ என்னும்
தவறிவிடவில்லை

வரலாற்றின்
வாழ்க்கையில்;;.;
உன்உயிர்
ஊமையாகிவிடவில்லை
உன்கரங்கள்
போர்க்களத்தில்
ஆயுதங்களுடன்தான்
என்றும் .;;

இந்நிகழ்விற்கு சகபோராளிகள் ,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாசம்மிகு
டாணியல் குடும்பத்தினர்.
(7713)

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை;
16-03-1994

தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-
ரஞ்சன் (தம்பையா விமலரஞ்சன் - 6-ம் வட்டாரம் குமுழமுனை - மணலாறு)
மகாலிங்கம் (அலெக்சாண்டர் சிறில் - சுதந்திரபுரம், உடையார்கட்டு-முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
சிவா | அப்பன் / பொடி (நடராசா கமலநாதன் - உரும்பராய், யாழ்)

1988-ம் ஆண்டு தமிழகம் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப்பிரிந்த
பத்மநாபன் (பி பத்மநாபன் - திருச்சி, தமிழகம்)

இளி - ஸ்கந்தபுரம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்

1989-ம் ஆண்டு சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர்

1990-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,
மேஜன் (வேலுச்சாமி ஜெகதீஸ்வரன்- 7-ம் வட்டாரம், குமுழமுனை, முல்லைத்தீவு)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,
கர்ணன் (வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன் - தம்பகாமம் பளை)

மட்டு - களுவாஞ்சிக்குடியில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு மன்னார் - கொண்டச்சி முகாமிலிருந்து சிலாவத்துறையை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,
கப்டன் மகேஸ்|தியாகு (சூசை நேசம் டலிமா கடற்கரைவீதி, 2ஆம் வட்டாரம் பேசாலை மன்னார்)
லெப். மன்னன் (நடராசா தயாளகுமார் 5ஆம் வட்டாரம், நெடுந்தீவு - யாழ்;)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவர்-

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8842)

# பாப்பரசரை வரவேற்பதில் பங்குபற்றும்வாய்ப்புஇல்லை

## - யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

(யாழ்ப்பாணம்)
ஆசாரத்துக்குரிய போசவ்வால் அவர்களின் முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கும் நிகழ்விற்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பாப்பரசர் கொழும்பு வரவுள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். அதே வேளை இன்றைய சூழ்நிலையில் வடபகுதி மக்கள் இந்த நிகழ்வில் பங்குபற்ற முடியாத நிலையும் உள்ளது. பாப்பரசர் அவர்கள் எமது மண்ணிற்கு வருகைதர வேண்டும். அல்லது எமது மக்கள் சுதந்திரமாகப் பங்குபற்றக் கூடிய சமுகமான சூழ்நிலை உருவாக வேண்டும், இவ்வாறு யாழ் மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்தார்.

யாழ் கத்தோலிக்க திருச்சபை மேய்ப்புப் பணி மகாநாட்டின் இறுதிநாள் அமர்வுக்குத் தலைமை வகித்து பேசிய ஆயர், தமது உரையில் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் மக்களையும், பிறநாடுகளிலும் உள்ள தமிழர்களையும் நினைவு கூரும், இந்த மகாநாடு வெறும் நிகழ்வு மட்டுமல்ல ஒரு மறை அனுபவம் என்றார்.

குரு முதல்வர் வண. எஸ். ஜே. இம்மனுவல் பேசுகையில் போரினால் பாதிக்கப்பட்டோர், இடம் பெயர்ந்தோர் அகதிகள், ஊனமுற்றோர், உறவற்றோர், உருக்குலைந்தோர், உளம் குலைந்தோர் அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அரவணைப்போம் என்றார்.

மகாநாடு நேற்றுமுன்தினம் யாழ்மற்றும் மன்னார் ஆயர்களின்திருக்கர ஆசியுடனும், பாப்பரசரின் கொடி இறக்கத்துடனும் சம்பிரதாய பூர்வமாகமுடிவுற்றது

## கமக்காரர் அறிமுக அட்டை அறிமுகப்பிரசாரம்ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் கமக்காரர் அறிமுக அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்கான பிரசாரக் கூட்டம் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கடந்த மாதம் நடாத்தப்பட்டது.

நானாட்டான், மாந்தை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இப்பிரசாரக் கூட்டத்தில் இவ் அறிமுக அட்டை பற்றிய பூரண விளக்கமும் இதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சி பற்றியும் அதன் மூலமான சமூக மேம்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் கமக்காரர் அறிமுக அட்டையை சகல கமக்காரர்களும் முழுமையாக பயன்படுத்தி நன்மை பெற வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது

## சிறுவர்இல்ல மாணவருக்கு லயன்ஸ் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)
பலனை எதிர்பார்த்துச் செய்யப்படுவது தானம், தர்மம் பலன் எதையும் எதிர்பாராது செய்வது. திருநெல்வேலிச்சிறுவர் இல்லத்திற்கும் பலன் எதையும் எதிர்பாராது உதவி வழங்கப் பலர் இருக்கிறார்கள். உதவி வழங்க வசதியும் பலரிடம் உள்ளது உதவி செய்யும்எண்ணமும் உள்ளது. ஆனால், அதற்கான ஊடகங்கள்தான் குறைவு. இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறினார்.

லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்த திருநெல்வேலி சிறுவர் இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் வானொலிப் பெட்டி அலைவரிசைகளில் உள்ள ஒலியலையை உள்வாங்கி நமக்குத் தருகிறது அதேபோன்று லயன்ஸ் கழகமும் மிகச் சிரமத்தின் மத்தியில் பொருள்களைச்சேகரித்து இந்த இல்லச் சிறுவர்களுக்குத் தந்துள்ளார்கள் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த இந்தச் சிறுவர்களும் எம்மத்தியில்தான் வாழ்கிறார்கள். லயன்ஸ் கழகத்தினரின் இந்த உதவி ஒரு நீண்டகால முதலீடாகும் என்றார்.

விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்களும் இல்லச் சிறுவர்களுக்கு அன்பளிப்புகளும் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்பட்டது. முடிவில் இல்லச் சிறுவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

## கஷ்டப்பிரதேச பாடசாலை விபரம் அனுப்பக் கோரிக்கை

## பிரிட்டன் தபாற்கட்டளை மாற்றுவதில் பெரும்சிரமம்

(பருத்தித்துறை)
வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்கள் யாழ் மாவட்ட மக்களுக்கு அனுப்பியுள்ள "பிரிட்டிஷ்போஸ்டல் ஓடர்" களைப்பணமாக மாற்ற முடியாமல் மக்கள் பெரும் திண்டாட்டத்திற்குள்ளாகியுள்ளனர். இந்த பிரிட்டிஷ் போஸ்டல் ஓடர்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அவைகளை வங்கிகள் தபால்நிலையங்களுக்குக் கொண்டு சென்று பணமாக மாற்றக் கேட்கும் போது இவ்வங்கிகள் தபால் நிலையங்கள் பிரிட்டிஷ்போஸ்டல் ஓடர்களுக்கான பணத்தின் பெறுமதி (RATES) வரவில்லை எனக் கைவிரித்து விடுகின்றனராம். இவ்வாறு நீண்ட நாட்களாக பிரிட்டிஷ் போஸ்டல் ஓடர்களைக் கொண்டு சென்று வங்கிகளிலும் தபால் நிலையங்களிலும் ஏமாறும் இம்மக்கள் இவைகளைப் பணமாக மாற்ற முடியாமல் அவதியுறுகின்றனர். எனவே இவ்விடயங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள் அவசியப்போக்கை விடுத்து மக்களுக்கு உதவக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரிட்டிஷ் போஸ்டல்ஓடர்களைவைத்து மாற்ற முடியாமல் தவிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

## திருமணப்பதிவு இலவசமாக செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருக்கும் பல்வேறு முகாம்களில் வசிப்பவர்களில் திருமணப் பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கு இலவசமாக திருமணப்பதிவு செய்து கொடுக்கப்படவுள்ளது.

அத்தியடியில் இருக்கும் திவக மக்கள் நலன்காக்கும் கழகத்தில் இப்பதிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறுமெனவும், தீவகக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வாரெனவும் கூறப்படுகிறது. (22)

## குப்பைகூளம் அகற்றும்பணி தனியாரிடம்விட ஆலோசனை

### கொழும்பு மாநகரசபை பரிசீலிப்பு

(கொழும்பு)
கொழும்பு மாநகரசபை தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சேரும் குப்பை கூளங்களை அகற்றும் பணி மற்றும் மாநகர சபைக்குச் சொந்தமாகவுள்ள மருத்துவமனைகளின் சுகாதாரப் பராமரிப்பு போன்ற பணிகளை தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இப் பணிகள் தற்போது மாநகரசபையின் பொது வேலைப்பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. எனினும் உரியமுறையில் இப்பணி நடைபெறுவதில்லை எனப் பலரும் புகார் தெரிவித்து வருகின்றனர். குப்பை கூளங்கள் தினமும் வீதியில் குவிந்து போகின்றன.

எனவே குப்பை கூளங்களை தினமும் ஒழுங்காக அகற்றுவது தொடர்பாக ஆராய மாநகரசபை ஓ எஸ். ஓமர் காம் தலைமையில் விசேட குழு ஒன்றை அமைத்தது. இக் குழு இப்பணிகளை தனியார் மயமாக்குவது பற்றி தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

இதேவேளை கொழும்பு மாநகரில் இயங்கும் ஆங்கில மற்றும் ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் சிலவற்றையும் தனியார் மயப்படுத்துவது பற்றி மாநகர நிர்வாக அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். இத்தகைய தனியார் மயமாக்கல்கள் பற்றி மாநகர சபை உலக வங்கி அதிகாரிகளுடனும்பேச்சுநடாத்தி வருகின்றனர்.

## அலங்கார உற்சவம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறையிலுள்ள புலோலி மருதடி ஞானவைரவர் சுவாமி ஆலய அலங்கார உற்சவம் கடந்த 13-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவங்களைப் பிரதம குரு பிரம்மஸ்ரீ இ. பொன்னம்பலக் குருக்கள் நடாத்தி வருகின்றனர். எதிர்வரும் 27ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 28-ம் திகதி வைரவ சாந்தியும் 29-ம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# நீதிமன்றம் குற்றவாளி என கண்டவரை ஜனாதிபதிமன்னிப்பதுதவறானதாகும்

## இன்றைய நிகழ்வுகள்

(வடமராட்சி)
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான ஒன்றுகூடல் இன்று பிரதேச செயலர் அலுவலகத்தில் பிரதேச செயலாளர் திரு. கனகரட்ணம் தலைமையில் நடைபெறும். (யோ)

ஃ ஃ

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் பாடசாலை அதிபர் திரு. கா. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் சங்கானை கோட்டக் கல்வியதிகாரி திரு. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள இருக்கிறார்.

ஃ ஃ

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகலில் வித்தியாலய அரங்கில் அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பம் கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, யாழ் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இ. இளம்பரிதி ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

ஃ ஃ

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை புனித சூசையப்பர்திருநாள்வழமை போல் இவ்வருடமும் நடைபெறவுள்ளது. இதனையொட்டி இன்று 16ஆம் திகதி புதன்கிழமை மாலை 5-30 மணிக்குப் பங்குத்தந்தை அருட்திரு ஜி. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் மாலை ஆராதனை ஆரம்பமாகும். இது தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும். (24)

ஃ ஃ

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவு சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று 16ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சுண்டிக்குளி சந்தியிலுள்ள பணிமனையில் தலைவர் திரு. எஸ். விரனிலஸ் தலைமையில் நடைபெறும். (24)

ஃ ஃ

அறிவு சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2-30 மணியளவில் ஆரியகுளம் சந்தி புதிய உயர் கலைக் கல்லூரியில் இயங்கும் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை நடத்தும் ஆய்வரங்கத் தொடரின் மூன்றாவது நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3 மணியளவில் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற இருக்கும் இவ் ஆய்வரங்கில் 1990க்குப் பின் யாழ்ப்பாண பிரதேசக் கவிதைகள் என்னும் பொருளில் செல்வி க. மங்கையேஸ்வரி சிறப்புரையாற்றவுள்ளார்.

ஃ ஃ

உரும்பராய் கொய்யாத்தோட்டம் ஞானசெல்வ விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது. தினமும் பிற்பகல் 4-30 மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சமய அறிஞர்களின் திருவருட் பேருரைகளும் இடம் பெறவுள்ளது.

## இல்லப் போட்டிகள்

(நமது நிருபர்)
தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை அதிபர் திரு. நாகராஜா தலைமையில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இப்போட்டியின் போது இன்னையா இல்லம், ஜெயரட்ணம் இல்லம், துரையப்பா இல்லம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

இன்னையா இல்லம் சயிறி மூத்தல், அஞ்சலோட்டம் ஆகியவற்றில் முதலிடத்தையும் அணிநடை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும்பெற்றுக்கொண்

## கஷ்டப்பிரதேச பாடசாலை விபரம் அனுப்பக் கோரிக்கை

(நல்லூர்)

கஷ்டப் பிரதேசங்களில் இயங்கிவரும் பாடசாலைகளின் பட்டியல்களை உடன் அனுப்பிவைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளது;

இப்பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாடசாலைகளில் விடுதி வசதிகளை உருவாக்கி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதனால் இவ்வாறு விடுதிவசதி இல்லாத பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கக்கூடியவாறு பட்டியல்களைத் தயாரித்து அனுப்புமாறும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேலும் கோரியுள்ளது (17)

## மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் அறிவு சஞ்சிகை வெளியீடு

கணித விஞ்ஞான ஆசிரியர் மன்றத்தின் வெளியீடான 'அறிவு' சஞ்சிகை இன்று ஆரியகுளம் சந்தி புதிய உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் இயங்கும் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் வெளியிடப் படவுள்ளது, புது மெருகுடன் உருவாக்கப்பட்டுள்ள இச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சியில் வேலணை--ஊர்காவற்றுறைக் கோட்ட பிரதம கல்விப் பணிப்பாளர் ரா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்கிறார். பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ஆர். எஸ். நடராசா நூல் அறிமுகவுரையை நிகழ்த்தவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தீவகக்கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த அ. நீ. ஒப்பிலாமணி, மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் கை. பேரின்பநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்,

## பொலிஸ் திணைக்களத்தில் புதிய பதவி உயர்வுகள்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் வெகு விரைவில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்கேற்ப பொலிஸ் திணைக்களத்தில் இதுவரை மேற்கொள்ளப்படாத வகையிலான பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் ஏப்பிரல் மாத முடிவுக்குள் மேலும் 11 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 12 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 40 பொலிஸ் அத்தியட்சகர்கள், 40 சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தில் 40 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த எண்ணிக்கை புதிய பதவி உயர்வுடன் 51ஆக உயர்கிறது;

இப்பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் முற்பகுதியில் நடாத்தப்பட இருந்தது. ஆயினும் தென் மாகாணசபைத் தேர்தலையடுத்து மாத இறுதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது;

# ஜனாதிபதிமன்னிப்பதுதவறானதாகும்

## - மனித உரிமைகள் செயற்பாட்டு குழு கண்டனம்

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் குற்றம் காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட இருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாக கண்டனம் தெரிவித்து மனித உரிமைகள் செயற்பாட்டுக் குழு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

செலடன் நிமால் பீரிஸ், டபிள்யூ. எம். பந்துல ஜயதேவ ஆகிய இவ்விரு நபர்களும் டபிள்யூ ஏ சுமணசிறி என்பவரை கைமோசக் கொலை செய்ய முயற்சி செய்த தவறுக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் மூன்று வருடக் கடுங்காவற் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் இவ் இருவரும் ஒருநாள் கூட சிறைத்தண்டனை அனுபவிக்க அனுமதிக்கப்படாமலேயே ஜனாதிபதி தனது மீயுரிமையைப் பயன்படுத்தி மன்னிப்பளித்து விடுதலை செய்தார் என்பது தெரிந்ததே.

இவ் விடயத்தில் தொடர்புபட்டுள்ள வினாக்கள் மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்தவை எனவும், நாட்டின் நீதி நிர்வாகம் தொடர்பான அடிப்படை அம்சங்களில் பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளன எனவும் நாம் நம்புகின்றோம் என்று மனித உரிமைகள் செயற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்குழு வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கை மேலும் குறிப்பிடுகையில்,

குற்றச் செயலால் விளைவிக்கப்படும் தீங்கு தனிப்பட்டவரின் நலனுடன் நின்று விடாது சமூகத்திற்கு பாரிய தீங்கை விளைவிக்கிறது ஊறு அடைந்தவரின் கோரிக்கையின் மீது தவறொன்று ஒத்தி வைக்கப்பட்டு கைவிடப்படவானது நீதி மன்றமொன்றால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனைவழங்கப்பட்டபின்னர் ஏற்படவியலாது அதுவும் குறிப்பாக நாட்டில் வன்முறைக் குற்றங்கள் அதிகரித்த வண்ணமாக இருக்கின்ற இக்காலகட்டத்தில் சமூகத்தின் நலன்கள் ஊறடைந்த தனியாளின் விருப்புக்கு மேலாக ஓங்கி நிற்க வேண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. வழக்குத் தொடுநருக்காக இரு வேறு நீதிமுறை நடவடிக்கைகளில் சாட்சியமளித்தபின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய ஆயுர்வேத வைத்தியரான டபிள்யூ ஏ சுமணசிறி தனது மனமாற்றத்தின் அடிப்படையில் விளக்கமளித்தபின் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குதல் என்பது குற்றவியல் நீதியையே வழிதவறச் செய்வது ஆகும்.

மேலும் இந்தவழக்கின்குறிப்பிடத்தக்கமற்றுமொரு அம்சம் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட இருவரும் இந் நாட்டின் நீதிமன்றங்கள் தொடர்பாக எடுத்து எறிந்தும் அவமதித்தும் நடந்த போக்கு ஆகும். நீதிமன்றத்தின் முன்பாக தோன்றும்படி பணிக்கின்ற கட்டளைகள் ஐந்து தடவைகள் ஆக்கப்பட்டபோதும், அவ்வாறு செய்யாமல் நீதிமன்றத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் போக்கை வெளிப்படுத்தினர் இத்தகைய போக்கு சமூகத்தில் நிலை யூன்றுமானால் சட்டம், ஒழுங்கைப்பேணுவதற்கான மரியாதை நீதி வழங்கும் நிறுவனங்களின் கண்ணியம் என்பன பாதுகாக்கப்படவியலாதுபோகும். ஜனாதிபதியின் மன்னிப்பு வழங்கும் மீயுரிமை பிரயோகிக்கப்பட்டமை நேர்த்தியானதா என்பதை தீர்மானிப்பதில் இக்காரணி மறுப்பின்றி மிகவும் தொடர்புடையதாகும்.

இறுதியாக மன்னிப்பு வழங்கும் மீயுரிமையானது மிகவும் கட்டாயமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படவே கருதப்பட்டது என்பதையும் நீதிநிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதிக்கக்கூடிய விதத்தில் பயன்படுத்தப்பட எண்ணப்படவில்லை என்பதையும் அழுத்திக் கூற விரும்புகின்றோம். இத்தகைய கொள்கை மீறப்படுவது சட்ட ஆட்சிக்கு மதிப்பு அளிக்கின்ற ஜனநாயக சமூகத்தின் அமைதியை பாதிக்கின்றதான பாரிய விளைவுகளைக்கொண்டு வரக்கூடியது என்பதும் தென்படும்ஒன்றாகும்; மன்னிப்பு வழங்கும் மீயுரிமையானது அரசியல் செல்வாக்கு இத்தகைய பணிகளைப் புரிகையில் எவ்வித பங்கையும் வகிக்காது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

## பிக்கு மாணவர் மரணம்

காலி சிறி பியரட்ட பிக்குமார் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற நாகொட சுமண (வயது11) என்ற பிக்கு மாணவர்மொட்டை மாடியிலிருந்து விழுந்து மரணமாகியுள்ளார்;

கொழும்பு வைத்தியசாலையில் இம் மாணவரின் மரணம் தொடர்பாக மரண விசாரணை நடைபெற்று விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது;

## நவநாள் ஆராதனை

(பருத்தித்துறை)

புலோலி புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா 10-ம் திகதி (10-3-94) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன, பருத்தித்துறை பங்குத்தந்தை நவநாள் ஆராதனைகளை நடாத்தி வருகிறார்; 18-ம் திகதி மாலை திருச்சொரூப பவனியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும். மறுநாளான 19-ம் திகதி காலை நடைபெறும் திருப்பலிப் பூசையுடன் திருவிழா பூர்த்தியடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

இல்லையா இல்லம் சயிறி முத்தல், அஞ்சலோட்டம் ஆகியவற்றில் முதலிடத்தையும் அணிநடை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது;

## வெப்பநிலை அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் வழமைக்கு மாறாக வெப்பநிலை அதிகரித்துச் செல்வதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் வெப்பம் தொடர்பான நோய்கள் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது;


யாழோசை மன்ற மாணவர்

அறிமுகவிழாவும் நிதியுதவி நிகழ்வும்

"விடியலைத் தேடும் பறவைகள் ஒலிப்பதிவு நாடா"

இசையமைப்பாளர்

யாழோசை கண்ணனின்

இசை நெறியாள்கையில்

**செந்தமிழ் பாட்டு**

தொடர் II

பல பாடகர்கள், பாடகிகள்

கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

23 4-94 - மாலை - 3.00 மணிக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

24-4-94 - மாலை - 3.00 மணிக்கு

யாழ். கைலாசபதி கலையரங்கம்

வாழ்த்துபவர்கள்!

**சிறிபடப்பிடிப்பு கலையகம்**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-8815)

# எக்காலத்திலும் மாற்றுக்கட்சியை நான் ஆரம்பிக்கப் போவதில்லை

## இ.தொ.கா பொதுச்செயலர் செல்லச்சாமி தெரிவிப்பு

நான் இ.தொ.காவிற்கு மாற்றுக்கட்சியினனாக இங்கு வரவில்லை. மாற்றுக் கட்சியொன்றை நான் ஆரம்பிக்கவும் இல்லை. எக்காலத்திலும் மாற்றுக் கட்சியை ஆரம்பிக்கப்போவதும் இல்லை. 45 வருடங்களாக ஒரே கொடியின் கீழ், ஒரே கட்சி என்ற கொள்கையுடன் இ.தொ.காவை வளர்த்து அதில் செயலாற்றி வருபவன் நான். இவ்வாறு இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார். அண்மையில் கலகா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசும் போது தெரிவித்தார். கலகா பிரதேச சபை மைதானத்தில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெறும் என்று துண்டுப் பிரசுரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், பின்னர் இக்கூட்டம் கலகா தமிழ் மகாவித்தியாலயத்தில் கலந்துரையாடலாக நடத்தப்பட்டது. மத்திய மாகாண சபையின் உறுப்பினர் அ. கதிரேசன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் முதலில் மத்திய மாகாண சபையின் இ.தொ.கா. உறுப்பினர் ஒருவர் பேச முற்பட்ட போது சபையிலிருந்து கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. செயலாளர் செல்லச்சாமி முதலில் பேசட்டும் என்றும், பாடசாலை சம்பந்தப்பட்ட விடயங்கள் மட்டுமே பேசப்பட வேண்டும் என்றும் கூடியிருந்தவர்கள் கூச்சலிட்டனர். இதைத்தொடர்ந்து அமைச்சர் செல்லச்சாமி உரையாற்றினார். அவர் தமதுரையில்,

இ.தொ.கா பலமான ஒரு ஸ்தாபனமாகவுள்ளது. இந்த உன்னதமான நிலைக்கு பல தொழிலாளர் தியாகம் செய்துள்ளனர். இதில் இப்பகுதி தொழிலாளர்களின் பங்கும் முக்கியமானது. இ.தொ.காவின் பொதுச் செயலாளராகவும், ஆசிரியர் காங்கிரஸ், தோட்ட உத்தியோகத்தர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவராகவும் இன்று நான் பொறுப்பு வகிக்கிறேன். நாட்டில் பல கட்சிகள் உள்ளன. ஐ.தே.கட்சிக் கூட்டங்களுக்கு சுதந்திரக் கட்சியினரும், சுதந்திரக் கட்சிக் கூட்டத்திற்கு ஐ.தே.கவினரும் செல்கின்றனர். அங்கு என்ன பேசுகிறார்கள் எனக் கேட்கின்றனர். ஆனால் நான் இங்கு மாற்றுக் கட்சியினனாக வரவில்லை. இ.தொ.கா, பலம் பொருந்திய ஒரு அமைப்பாக வளர கடந்த 45 வருடங்களாக தலைவர் தொண்டமானுடன் ஒன்றுபட்டு உழைத்தவன் நான். தொண்டமானும், செல்லச்சாமியும் ஒன்றுபட்டே உழைத்தனர்.

தோட்டத் தொழிலாளரின் போராட்டங்களில் நானும் ஒன்றுபட்டு உழைத்தவன். தொழிலாளர் வெற்றியில் இ.தொ.காவாக நானும் உங்களுடன் செயலாற்றியவன். நமக்குள் குடும்பக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. இதைப் பெரிதுபடுத்த வேண்டியது அவசியம்தானா?

காமினி எம்மை மோதிக்கொள்ள வைத்துவிட்டு போய்விட்டார். காமினிக்காக நாம் ஏன் மோதிக்கொள்ள வேண்டும்? நாம் ஏன் பிரிய வேண்டும்? நாம் பிரிய வேண்டியது அவசியமில்லை. தலைவரும் பொதுச் செயலாளரும் ஒன்றுபட வேண்டும் என்று எல்லோரும் ஆலோசனை கூற வேண்டும்.

நமது மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டிய காலத்தில் நாம் வேறு திசைகளில் செல்லலாமா? எத்தனையோ தோட்ட தொழிலாளர்கள் சூடுபட்டு இறந்து உயிர்த்தியாகம் செய்து கட்டிக் காத்த ஸ்தாபனம் இ.தொ.கா. கடந்த 45 வருடத்தில் நான் பேசாத மேடை இல்லை. ஒரு சிலரால் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை தீர்த்துக் கொள்ள முடியும். சனநாயக ரீதியில் நமது கருத்தைச் சொல்லவும் கேட்கவும் இடமளிக்கப்பட வேண்டும். சுதந்திரம் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய மத்திய மாகாணசபையின் தமிழ்க் கல்வி அமைச்சர் அ. கதிரேசன் தமது உரையின் போது அன்று பசி தான் எமது எதிரி. இன்று அறியாமையே எமது எதிரி. எம்மால் கிடைத்த அமைச்சர் பதவியை வேறு கட்சிக்கு அடைவு வைக்கக் கூடாது எமது சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டியதைப் பெரும்பான்மையினர் பெறுவதைத் தடுப்பதற்காகவே நான் தமிழ்க் கல்வி அமைச்சு பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மத்திய மாகாணசபை உறுப்பினர்களான ஆர். தங்கவேல், எஸ். அருள்சாமி, எம். நடராஜ பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

# 5 கோரிக்கை முன்வைத்து 2500 தொ. வேலைநிறுத்தம்

(மாத்தளை)

மடுல்கெலகனா பொக்க அரச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 2500 தோட்ட தொழிலாளர்கள் கடந்த வாரம் முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

வயது வந்தவர்களுக்கு வேலை வழங்குவதற்கான பெயர் பதிவு செய்யப்படாமை, குடியிருப்புகள் பல வருடமாக புனரமைக்கப்படாமை, குடிநீர் மற்றும் தண்ணீர் வசதி போதாமை, மலசலகூட வசதிகள் செய்யப்படாமை, சிலருக்கு பல வருடமாகியும் ஓய்வூதியம் வழங்காமை, வரட்சி நிவாரணம் வழங்கப்படாமை போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் இப் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த சோளங்கந்த, எலகிரிய, மேமலை, டீமலை, ரெலுகஸ், கரலை, நடுக்கணக்கு, இங்கமலை, நெல்லிமலை, காய்ச்சமலை, கலபொக்க ஆகிய டிவிஷன்களைச் சேர்ந்த இ.தொ.காவின் உறுப்பினர்களே இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தீ அணைக்க வந்த பௌசரில் நீர் இல்லை

(கொழும்பு)

நுவரெலியா சவேரியார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கோவில் வீதியில் உள்ள கடை ஒன்று முற்றாகவும், மரக்கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியும் தீ விபத்தினால் சேதமடைந்துள்ளது.

தீயை அணைப்பதற்காக நுவரெலியா மாநகர சபையிலிருந்து வந்த பௌசரில் தேவையான அளவு நீர் இல்லாததால் அது திரும்பிச் சென்றுவிட்டது.

காவலர் அறையில் ஏற்பட்ட மின் ஒழுக்கே தீ விபத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது

## அலங்கார உற்சவம்

மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற இருக்கும் விசேட அபிஷேகம் மற்றும் பூசை ஆராதனைகளுடன் நிறைவுபெற இருக்கிறது. கடந்த பத்தாம் திகதி ஆரம்பமான இவ் உற்சவம், நிறைவு பெறுவதையிட்டு விசேட சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெற உள்ளது. (24)

## கருத்தரங்கு

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்தமும், தேசிய அமைதியும் என்னும் கருப்பொருளிலான கருத்தரங்கொன்று எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகலில் கொழும்பு கிரான்ட் ஒறியன்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கே. பாலகிட்ணர் தலைமையில் நடைபெற இருக்கும் இக்கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஜி. எல். பீரிஸ், அரசியலமைப்பு விவகார சட்டத்தரணி டாக்டர் நீலன் திருச்செல்வம், முஸ்லிம் பெண்கள் மாநாட்டிற்கான இலங்கைச் சமிதி தலைவி ஜெஸிமா இஸ்மாயில் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

## சித்தி பெற்ற 20 பேரில் தமிழர் ஒருவரே

(பருத்தித்துறை)

அரசாங்க சிறாப்பர் சேவை வகுப்பு 11 பிரிவு ஆவின் பதவி உயர்வுக்காக அரசினால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 20 பேரில் ஒரே ஒருவர் மாத்திரமே தமிழராவார். ஏனைய 19 பேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவராவர். யாழ் மாநகர சபையில் சிறாப்பராகக் கடமையாற்றும் திரு ஆ. தங்கராஜாவே சித்தியடைந்த ஒரேயொரு தமிழராவார். இப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் திரு. டபிள்யூ. டீ. எல். பெரேராவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# பலமுன்னுதாரணங்களுடன் வெற்றிவிளிம்பில் போராட்டம்

## - இளம்பரிதி

(தென்மராட்சி)

எமது விடுதலைப்போராட்டமானது 10 வருடங்களுக்குப் பின்னும் முன்னுமாக பல முன் உதாரணங்களையும், முத்திரைகளையும் உலகிற்கு பரப்பி நிற்கின்றது. நீண்ட தியாகங்களுக்கு இடையிலும் ஒரு வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் எமது மண்ணையும் மக்களையும் நேசித்து வீரமரணம் அடைந்த மாவீரர்களே.

இவ்வாறு அண்மையில் யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. பொற்கோ தலைமையில் இடம் பெற்ற சாவகச்சேரி

அவர்கள் எதையும் கொண்டு வரவும் இல்லை. இங்கிருந்து கொண்டு போகவும் இல்லை. அங்கு இருப்பவர்கள் அரசியல் செவிடர்கள். அவர்கள் தமது தேவைக்காக அரசியலில் லாபம் தேடுபவர்கள். அரசு ஒருபுறம் உலகநாட்டுக்கு தாம் சமாதானத்தை விரும்புவதாக உலகை ஏமாற்றி கடந்த வாரமே சீனாவிடம் 500 கோடி ரூபாவுக்கு ஆயுதத்தினை இறக்கியுள்ளது. இதைவிட அனுராதபுர மருத்துவமனையில் இராணுவத்திற்கென 42 பிரபல வைத்திய நிபுணர்களை ஒழுங்கு செய்து வைத்துள்ளது. இப்படியான ஒரு பெரிய அளவிலான புதிய முறையிலான யுத்தம்

ளது. எங்களுடைய தலைவரின் போராட்ட உணர்வுகள் எல்லோருக்கும் புரியும். எங்களுடைய போராட்டம் உலகிலேயே ஒரு முக்கியமானது. இலங்கை இந்தியப் பேச்சுக்களின்போது எம் தலைவரோடு நேரடியாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நேரடியாகப் பேசினார், அப்போது அவர் கேட்டுக்கொண்டது என்னவென்றால் உங்களுக்கு சகல சலுகைகளும் தருகின்றோம். தமிழீழத்திலே பதவிகளும் தருகின்றோம், ஆனால் ஆயுதத்தைக் கைவிடுங்கள் போராட்டத்தையும் விடுங்கள் என்று.

# வாரத்தில் ஆறுநாள் வேலை இன்றேல் வேலை நிறுத்தம்

## - ஊவா தொழிலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஆறு நாள் வேலை வழங்கப்பட வேண்டும் அல்லது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்று ஊவா மாகாண தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இ.தொ.காவின் பதுளை மாநில தொழிற்உறவு இயக்குநர் என். சண்முகம் இது சம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில் பலாங்கொட பெருந்தோட்டக் கம்பனியின் கீழுள்ள தோட்டத்தில் இவ் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படும் எனவும், இது மற்றைய தோட்டங்களுக்கும் விரிவாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்தில் பெரும்பாலான தோட்டங்களில் ஆறு நாள் வேலை வழங்கப்படுவதில்லை எனவும், வேலை நாள் வேலை செய்தாலும் கூட அரைநாள் சம்பளமே வழங்கப்படுகிறது எனவும், தோட்டங்களில் அதிக கொழுந்து இருக்கும் போதும் கூட வேலை வழங்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை பதுளை ஸ்பிரிங்வெலி தோட்டத்திலும் வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது. சில நாட்கள் நீடித்த இவ் வேலைநிறுத்தம் பின்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

# லலித்தின் கொள்கைகளை

தொல்புரம் வழுக்கம்பரைமுத்துமாரியம்மன்

தேவஸ்தான பரிபாலன சபை

தொல்புரம், சுளிபுரம்

**காரியாலய பொறுப்பாளர் பதவி (ஆண்)**

பதவிக்கு மேற்படி கோவிலை சூழ 1 மைல் எல்லைக்குள் வசிக்கும் 35-50 வயதுக்குட்பட்ட க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றிய, கோவில் தொடர்பான பதவியில் முன் அனுபவம் மிக்க ஆசார சீலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் மேற்படி தேவஸ்தான செயலாளருக்கு முகவரியிடப்பட்டு 25.03.94ற்கு முன் அனுப்பப்படுதல் வேண்டும். ஊதியம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தலைவர்

பரிபாலனசபை

திரு.பொற்கோ தலைமையில் இடம் பெற்ற சாவகச்சேரி வட்டத்திற்குட்பட்ட 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 1 ஆம் 2 ஆம் மாதங்களில் வீரச்சாவினைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி அவர்கள் கூறினார். இந் நிகழ்வில் முதலாவது நிகழ்ச்சியாக மாவீரர்களுடைய ஈகச்சுடரை யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. எழிலன் ஏற்றி வைத்தார்: இதனைத் தொடர்ந்து மாவீரருடைய உருவப்படங்களுக்கு பெற்றோர்கள் மலர்மாலை அணிவித்தார்கள்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்த்திய திரு இளம்பரிதி அவர்கள், எமது மக்கள் எண்ணுகின்றார்கள் அமைதி வரப்போகின்றது சமாதானம் வரப்போகின்றது என்று இந்த முறை பிரச்சினை தீரும் வெளிநாடுகள் முன்நிற்கின்றது. என்பது மக்கள் எண்ணம். ஆனால் உண்மை நிலை என்ன என்பதைத் தெட்டத் தெளிவாக மக்கள் உணர வேண்டும்: கடந்த சிலமாதங்களாக அரசு-புலிகள் பேச்சுக்கு இடையில் சமாதானக் குழுக்கள் என்று திருச்சபையினர் இங்கு வந்து போனார்கள்: இது மக்களுக்குத் தெரியும். இவர்கள் எம்மிடம் கூறினார்கள், அரசு சமாதானத்துக்குத்தான் விரும்புகின்றது. அந்த அடிப்படையில் தான் வந்திருக்கின்றோம் என்றார்கள் நாம் கூறினோம் நாமும் எமது மக்களும் சமாதானத்திற்குத்தான் விரும்புகின்றோம். ஒரு சுமுகமான வழி வரவேண்டுமாக இருந்தால் பொருளாதாரத் தடையை நீக்கி யுத்தத்தினை நிறுத்தி பேசுங்கள் என்று நீங்கள் அரசிடம் ஏன் கேட்கவில்லை என கேட்டபோது அவர்கள் மௌனமாகிப் போனார்கள்.

ஒரு பெரிய அளவிலான புதிய முறையிலான யுத்தம் ஒன்றை அரசு நடத்த இருக்கின்றது: அது எங்கு இடம் பெறப்போகின்றது என்று தெரியாது ஆனால் குறிப்பாக யாழ். குடா நாடு மீதுதான். எதிரி இப்போது தென்பகுதியில் பிரசாரயுத்தம் நடத்துகின்றான்; யுத்தத்தின் நாட்கள் நெருங்குகின்றது தீர்வு வராது. எங்களை நோக்கி வருவது யுத்தமே. இப்படியான நேரத்தில் மக்கள்விழிப்பாக இருக்கின்றார்களா? இல்லை மக்கள் மயக்க நிலையில் தான் இருக்கின்றார்கள் ஆனால் மக்கள் அழிவு ஏற்பட்டபின்தான் விழிப்பார்கள். அதில் அர்த்தமில்லை: முன்னரே எம்மோடு தோளோடு தோள் நின்று போராட்டத்தினை விரைவு படுத்த வேண்டும்; முன்னர் தமிழர்களுடைய தேசியம் சிங்கள தேசியத்தால் அழிக்க முற்பட்டது. ஆனால் தற்போது தமிழர் தேசியத்தை எந்த ஒருவராலும் எந்த முறையாலும் அழிக்க முடியாமல் உள்ளோம். ஆனால் ஆயுதத்தைக் கைவிடுங்கள் போராட்டத்தையும் விடுங்கள் என்று, ஆனால் எமது போராட்டத்தில் உறுதிமிக்க தலைவர் அவர்கள் அவரிடம் கூறினார் நாம் இந்தப் பதவிக்கோ சலுகைகளுக்காகவோ இந்தப் போராட்டத்தினை ஆரம்பிக்கவில்லை: நாம் எமது உரிமைக்காகத்தான் போராட்டத்தினை நடத்தி வருகின்றோம்: உங்கள் வலையில் சிக்கிவிட முடியாது என்றார்:

சிறிலங்கா அரசு ஆட்பலத்தை வைத்து போரை நடாத்தப் போகின்றது, ஆனால் எமக்கு ஆட்பலம் தேவை. மக்கள் எல்லாம் எமது பக்கம் நிற்பார்களேயானால் எதிரிக்குப் பாரிய பதிலடி விழும். அப்போது ஜெரிடி சில்வா என்ன செய்வார்? அவரும் இறங்குவார், வேறு யாருமே ஏறமாட்டார்கள். அப்போது எமது மண் விடுவிக்கப்படும் நாம் அப்போது சுதந்திரமாக சொந்த வளத்திலும், சொந்தபலத்திலும் வாழ முடியும்.

## நீதிமன்ற உதவியை நாட பாதிக்கப்பட்டவர்கள் முடிவு

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாட தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது: இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான இழப்பீடுகளோ நட்டஈடுகளோ வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புதுநகர், வலையிறவு, சேற்றுக்குடா, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 386 குடும்பங்கள் இந்த விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டமை தெரிந்ததே. 1985 ஆம் ஆண்டில் அவசரகாலசட்ட விதியின்கீழ் 386 தமிழ்க் குடும்பங்களினதும் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. இவர்களுக்கு கடந்த ஒன்பது வருடங்களாக நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின்போதும் இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணியின் சொந்தக்காரர்களான உரிமையாளர்கள் பிரதமமந்திரியும் காணி அமைச்சரை சந்தித்து தமது நிலைபற்றிமுறையிட்டனர். ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பாக இதற்கான இழப்பீடு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது;

தோட்டங்களுக்கும் விரிவாக்...வது.

## லலித்தின் கொள்கைகளை ஐ·தே·க. முன்னெடுக்கும்

- அமைச்சர் டிரோன் பெர்னான்டோ

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களில் சுதந்திரக்கட்சி வெற்றிபெறுமாயின் மீண்டும் இருண்டகாலம் தோன்றும். பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதுடன் கியூ வரிசைகளும் நீண்டு கொண்டு செல்லும்: எனவே அனைவரும் டி. பி. விஜேதுங்காவின் அரசு வெற்றிபெறப் பாடுபடல் வேண்டும். இவ்வாறு அமைச்சர் டிரோன் பெர்னான்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.

இரத்மலானை தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற ஐ. தே. க வின் பிரசாரக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், கடந்த மாகாணசபைத்தேர்தலின் போது மேல் மாகாணத்தில் ஐ. தே. க; சந்தித்த தோல்வியைத் தொடர்ந்து கட்சியை மீளவும் கட்டி எழுப்பி அடுத்து வரும் தேர்தல்களில் ஐ. தே. க வின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும். 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு நாட்டில் இருந்த நிலையை படம் பிடித்துக் காட்டுவதன் மூலமாக இன்றைய இளைஞர்களுக்கு உண்மைநிலை தெரியப்படுத்தப்படல் வேண்டும் காலஞ்சென்ற அமைச்சர் லலித் அத்துலத்முதலி போன்றோரின் கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஐ. தே. கவினால் மட்டுமே முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சேவை நலன் பாராட்டு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் 19 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர் திரு; கோ. செல்வவினாயகத்தின் சேவைகளைப்பாராட்டி கல்லூரியின் அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து அதிபர் திரு ச. யோகச்சந்திரன் தலைமையில் சேவைநலன்பாராட்டு விழாவை நடாத்தினர்பழைய மாணவர்சங்க உப தலைவர் திரு க. சண்முகசுந்தரமும், சமாதான நீதிபதி ம; சங்கரகாந்தலிங்கம், இளைப்பாறிய சித்திர ஆசிரியர் திரு ப. பால சுப்பிரமணியம், இளைப்பாறிய மரவேலை ஆசிரியர் திரு பழனிவடிவேல் உட்பட இன்னும் பலர் இளைப்பாறிச் செல்லும் அதிபரின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர். இளைப்பாறிய அதிபர் திரு கோ. செல்வவினாயகம் நன்றி தெரிவித்து உரையாற்றினார் (25)

## நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் பேராசிரியர் திரு; வி கே கணேசலிங்கம் உபதலைவர் திரு சிவநாதன். செயலாளர் திரு பா இரகுநாதன், பொருளாளர் திரு ஏ ஏ ஜோசப் மற்றும் ஐந்து பேர்கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்


(யோ)

தலைவர்

பரிபாலனசபை

(7761)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:

27 - 06 - 1927

மறைவு:

27 - 03 - 1993

திதி:

16 - 08 - 1994

### வேலுப்பிள்ளை கந்தசாமி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் நினைவுகள் நீங்கிடுமோ - ஐயா!

மண்ணில் நாம் இருக்கும்வரை உம்மை மறப்போமா - ஐயா! தலைவா!

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

இன்று (16-08-94) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

என்றும் தங்கள் பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்

கல்லுவம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(7742)

## சிந்தனைக்கு

ஒரு மாணவனால் சிந்திக்கக் கூடிய அளவுக்கு மேலாக அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடாது.

— ஆல்ஃபிரெட் நார்த் வைட்ஹெட்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# கத்தோலிக்க குருமாரின் நியாயமான கோரிக்கை

இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு காணப்படும் வரை உங்கள் சிறிலங்காவிற்கான விஜயத்தை ஒத்திவைப்பதே நல்லது என பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரிடம் கத்தோலிக்க குருமார்கள் விடுத்துள்ள கோரிக்கையானது இனப் பிரச்சினையின் இன்றைய நிலையின் வெளிப்பாடாகும். ஒரு முன்மாதிரியான இச்செயல், இனப்பிரச்சினையின் தாக்கத்தை உலகிற்கு உணர்த்தக் கூடியதும் ஆகும்.

ஒருவாரமாக இடம் பெற்ற மேய்ப்பு பணி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட இம் முடிவுடன் இதற்கு முன்னைய நாட்களில் இம் மாநாட்டில் பிரேரிக்கப்பட்ட வேறு சில விடயங்கள் இனப்பிரச்சினை இன்று அடைந்துள்ள நெருக்கடி நிலையை தெளிவாகவே வெளிக்காட்டுகின்றது. இதில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், திருமலை மற்றும் மட்டக்களப்பு மறை மாவட்டங்களை ஒரு தனிப்பிரதேச ஆயர் மன்றமாக இணைப்பதற்குரிய நடவடிக்கைகளில் யாழ். திருச்சபை ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கை முக்கியமானதாகும்.

இக்கோரிக்கையானது தற்பொழுது இலங்கைக்கெனவுள்ள ஆயர் மன்றத்தில் இருந்து பிரிந்து தமிழ் மக்கள் அதிகமாகவுள்ள வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கென தனியாக ஒரு ஆயர்மன்றத்தை கோரும் முயற்சியாகும். இது சிங்கள இனத்துடன் மதரீதியாகக் கூட இணைந்திருக்க வாய்ப்புக்கள் அற்றுப் போயுள்ளதையே காட்டுவதாகவுள்ளது.

இதேவேளை, பாப்பரசர் சிறிலங்காவிற்கான தனது விஜயத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தாம் விடுத்துள்ள கோரிக்கைக்கு சரியான நியாயத்தினையும் கத்தோலிக்க குருமார்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியும் உள்ளனர். சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து அதை முடி

## பிரபாகரன்

கில் தமிழ் அரசியலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பான விமர்சனங்களோ, அவரது தீவிர வன்முறைப் போக்கையும் எதிர்த்து நிற்கும் அணுகுமுறையையும் வெறுப்பவர்களோ எப்படியிருந்தாலும் அவர் தன்னை ஒரு தனியாங்கிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையிலிருந்து ஓர் இன மக்களின் வீரத்தலைவராக தன்னை மாற்றிக் கொண்டு விட்டார்.

# இனப்பிரச்சினை தீர்வில் மையசக்தி புலிகளே

விடுதலைப் புலிகளின் ராணுவ அடிப்படையிலான ஆற்றலும் தயார் நிலையும் தளர்ச்சியடையாமல் உறுதியானதாகவே உள்ளது. பூநகரி ராணுவ முகாம் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பெற்ற வெற்றி இந்த உண்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் பிரமுகர்கள் பலர் மீண்டும் இந்திய உதவி பெறப்பட வேண்டும் எனச் சிந்திக்க தொடங்கியுள்ளனர் என உறுதிப்படுத்தப்படாத செய்திகளும் எதிர்பார்ப்புக்களும் வெளியாகின. ஆனால், இதற்கான சரியான ஆதாரங்கள் எதுவும் இல்லை, எதிர்காலத்தில் இந்தியா இதற்குள் இறங்காது என்பதை எவரும் துணிந்து கூறலாம். எனவே இலங்கைப் பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்விலும் விடுதலைப் புலிகள் அமைப்புதான் மத்திய சக்தியாக இருக்கும்.

# தொண்டமானின் பிடி விடுபடத் தொடங்கி விட்டது

மற்றொரு முக்கிய விடயமாக மத்திய மலையகத்திலும் தென்பகுதியிலும் உள்ள அண்மைய இந்திய வம்சாவளித் தமிழர்களின் விடயம் உள்ளது.

அரசியல் உடைவு காரணமாக ஏற்பட்டுள்ள ஒரு மனவேதனையை இவர்கள் அனுபவித்துக் கொண்டுள்ளார்கள். தமிழர்களுடைய இந்தக் குழுவின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தலைவராகவுள்ள தொண்டமானின் பிடி பல வருடங்களின் பின்னர் இப்போது விடுபட்டுச் செல்கின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதற்குள்ளே ஏற்பட்டுள்ள நிலைமைகளால் ஒரு பதற்ற நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில் பழைய தலைவர்களின் மயக்கத்திலிருந்து இளைஞர்கள் விடுபட்டுள்ளார்கள்.

# இலங்கைப் பிரச்சினையை புறக்கணிக்க முடியாது

இப் பிரச்சினையிலிருந்து இந்தியா தன்னைப் பிரித்துக்கொண்டுள்ளபோதிலும் கூட இந்தப் போக்குகள் மற்றும் நடவடிக்கைகளை இந்தியாவால் புறக்கணித்துவிட முடியாது. தமிழ் நாட்டில் பெருமளவு இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளார்கள். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளாவில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்வதாக நம்பத்தகுந்த தகவல்கள் கூறுகின்றன.

இந்தியாவின் பகுதிகளை தமது தள ஆதரவுக்கான தளமாக விடுதலைப் புலிகள் இப்போதும் பயன்படுத்துகின்றனர். இதற்காக மறுபக்கத்தில் இலங்கை ராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளின் பதில் தாக்குதல்கள் இடம்பெறுகின்றது.

இந்த நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயானதாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தால் இந்தியா மீதான இதன் தாக்கம் உடனடியானதாகவோ வெளிப்படையானதாகவோ இருக்காது. இது பிரச்சினையல்ல.

இலங்கைக் கடற் படையினரதும் ராணுவத்தினரதும்

# மன்மோகன்சிங் நியமனம் சட்ட பூர்வமானதா?

## ஆராய தேர்தல் ஆணையம் தீர்மானம்

(டில்லி)

நிதியமைச்சர் மன்மோகன் சிங் மாநிலங்களவைக்குத் தெரிவு செய்யப்பட்ட முறை சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு இந்தியத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினரான நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் வடகிழக்கு மாநிலமான அசாமில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர் ஆவார். எனினும் அவர் அம் மாநிலத்தின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாக நீண்டகாலம் அம் மாநிலத்தில் அவர் வாழ்ந்திருக்கவில்லை எனவும், அதனால் அவரது தெரிவு செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்ட சில புகார்களையடுத்தே இவ்விசாரணையை நடத்த தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதனால் நிதிஅமைச்சருக்கும் தேர்தல் ஆணையாளருக்குமிடையே பெரும் மோதல் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பொருளாதாரத்துறையில் பெரும் சீர்திருத்தங்களை மேற்கொண்டுவரும் மன்மோகன்சிங் மற்றும் தேர்தல் விடயத்தில் பெரும்சீர்திருத்தங்களை மேற்கொண்டு வரும் டி-என்-சேஷன் ஆகியோருக்கு இடையிலான மோதல் எந்தளவுக்கு விரிவடையும் என்பது தெரியவரவில்லை.

ஆயினும் மாநிலசட்டசபைகளால் மாநிலங்களவைக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் அந்த மாநிலத்தில் வாழ்ந்தவராக இருக்கவேண்டும் என்ற விதியை டி-என்-சேஷன் கடுமையாக கடைப்பிடிப்பார் என்றே கூறப்படுகிறது.

# உறைபனியின் காரணமாக 103 பேர் மாஸ்கோவில் சாவு

(மாஸ்கோ)

உறைபனி பெய்ததன் காரணமாக மாஸ்கோவில் 103 பேர் மரணமடைந்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. மாஸ்கோவில் இம்முறை வழமைக்கு மாறாவகையில் பெருமளவில் உறைபனிக் குளிரால் மரணமானவர்களில் பெரும்பாலானவர்கள் மதுபோதை ஒய்வூதியக்காரர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மரணமானவர்களில் 78 பேர் ஆண்கள் எனவும், 25 பேர் பெண்கள் எனவும் மாஸ்கோவின் அரசாங்க வைத்தியத்திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

# இராணுவ ஆலோசனைக்கு அமெரிக்கா சீனா இணக்கம்

(பீகிங்)

அமெரிக்காவும் சீனாவும் இராணுவ ஆலோசனைகளை மீண்டும் கலக்க இணக்கம் தெரிவித்துள்ளன. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வாறன் கிறிஸ்தோபரின் சீனப் பயணத்தின் முடிவின் போது பீகிங்கில் இது அறிவிக்கப்பட்டது. சீனாவில் 1989ல் ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் தொடங்கிய பின்பு இத்தகைய இராணுவ ஆலோசனைக் கலப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் பிரச்சனையில் தத்தம் கருத்துவேறுபாடுகளை குறைத்துக் கொள்ள இரு நாடுகளும் இணங்கியிருப்பதாக வாறன் கிறிஸ்தோபர் பீகிங்கில் மேலும் தெரிவித்தார்.

# டினோசர் இனப்பிராணி கடலில் கண்டுபிடிப்பு

(லண்டன்)

லொக்வெஸ் எனும் பிரபலமான பயங்கர பிராணியொன்று இன்னமும் உயிரோடு இருக்கிறது என அனெஸ்ரெயர் போயினி எனும் ஆராய்ச்சியாளர் அறிவித்துள்ளார். இந்தக் கடற்பிராணி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக்கூறப்படுகிறது. 1934-ம் ஆண்டு இதன்படம் லண்டன் பத்திரிகை ஒன்றில்பிரசுரிக்கப்பட்டபோது, இந்தப் பிராணி இன்னும் உயிருடன் இருக்கக் கூடும் என நம்பப்பட்டது.

இதன் புகைப்படத்தை ஆராய்ந்தநிபுணர்கள்பிராணி அருகிப்போன 'டினோசா' இனத்தைச்சேர்ந்ததாக இருக்கலாம் என நம்புகின்றனர்.

# மைலாப்பூர் இடைத்தேர்தல் மூன்று முனைப் போட்டி

(சென்னை)

மைலாப்பூர் பெருந்துறை சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் எதிர்வரும் மே 26 ஆம் திகதி

...வது இதனால் இப்போதே தேர்தல் சூடுபிடித்துள்ளது

## கிளிண்டனுக்கு நெருக்கடி

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான அசோசியேட் அட்டர்னி ஜெனரல் வெப்ஸ்ரர் கபில் முறைகேடுகள் குற்றச்சாட்டு சுமத்தப்

## 21 பொலிஸார் பணி நீக்கம்

காட்டியும் உள்ளனர். சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து அதை மூடி மறைப்பதிலேயே தீவிரம் காட்டி வருகின்றார். அவரது இத்தகைய திட்டத்திற்குப் பாப்பரசரின் கொழும்பு விஜயம் சாதகமாகி விடும். எனவே இனப்பிரச்சினை தீரும் வரை நீங்கள் சிறிலங்கா வருவதை நாம் விரும்பவில்லை என்பதே குருமார்களின் கோரிக்கையாகும்.

குருமாரின் இக்கோரிக்கையில் பாப்பாண்டவரின் சிறிலங்கா விஜயம் அரசியல் நோக்கத்திற்காகத் தவறாகப் பயன்பட்டுவிடும் என்பதோடு, தமிழ்மக்களின் நியாயபூர்வமான பிரச்சினைக்கு பாப்பாண்டவர் மதிப்பளித்து பிரச்சினை தீர்வதற்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையிலானது என்றே கொள்ள முடியும்.

இந்த வகையில் கத்தோலிக்க குருமார்களின் கோரிக்கையை நியாயத்தின் அடிப்படையிலும், மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் பாப்பரசர் பரிசீலிக்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் அபிலாஷைகளாகும்.

இலங்கையில். தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் உலகம் அறியும். அரசுகள் என்ற ரீதியில் இவ் இனப்படுகொலைகளைக் கண்டும் காணாமலும் இருந்து வருகின்றன, இதன் காரணமாக இனப்படுகொலைகளை நிறுத்தவோ அன்றி கட்டுப்படுத்தவோ சிறிலங்கா போன்ற அரசுகள் முனைவதில்லை. மாறாக, அரசு என்ற ரீதியில் அந்நிய நாட்டுக் கடன்களையும், உதவிகளையும் பெற்று மேலும் மேலும் இனப்படுகொலைகளைத் தீவிரமாக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது,

இந்த நிலையில், சர்வதேச மனிதநேய ஸ்தாபனங்களும், மனித உரிமை ஸ்தாபனங்களும், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுமே இங்கு நடைபெறும் இனப்படுகொலையை வெளியுலகின் கண்களுக்கு ஓரளவு தெரியபடுத்தி வருகின்றன ஆனால், அவற்றின் முயற்சிகளினால் ஏற்படும் பயன் மிகவும் குறைந்தளவானது ஏனெனில் இவர்களின் நிலைப்பாட்டை சில அரசுகள் ஆதரிப்பது போல் காட்டிக்கொண்டாலும் அரசுகளின் உறவுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதினால் இவை அதிகம் பேச்சளவிலேயே உள்ளன.

இந்நிலையில், ஒடுக்கப்படும் ஒரு மக்கள் இனத்தின் நியாயபூர்வமான கோரிக்கைக்கு பாப்பரசர் செவி சாய்ப்பதன் மூலம் துன்பமுறும் மக்களுக்கு உதவி புரிவதோடு, நியாயமான பாதையில் செல்வதற்காகப் பாராட்டப்படவும் கூடும். உலக சமாதானத்திற்குப் பெரும் பங்காற்றும் மன நிறைவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

---

காது. இது பிரச்சினையல்ல;

இலங்கைக் கடற் படையினரதும் ராணுவத்தினாதும் நடவடிக்கைகள் தமிழ்நாடு மற்றும் கேரள தென்பகுதி மீனவர்களின் வாழ்க்கையை பாதிப்பதாக உள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளபோதிலும் அது கரிசனைக்குரிய ஒரு விடயமாகவே உள்ளது; இந்தியாவினுடைய அரசியல் நலன்களைப்பொறுத்தவரையில் ஒரு சமாதானமான ஐக்கியப்பட்ட, ஸ்திரமான இலங்கையே சிறப்பான இருதரப்பு உறவுகளுக்கும் சக்தி வாய்ந்த பிராந்தியக் கூட்டுறவுக்கும் அவசியம்;

## டி.பி.யின் அணுகு முறை வெற்றி அளிக்கப்போவதில்லை

கடந்த இரண்டரை வருடகாலத்தில் இந்தியா இலங்கையுடனான அதனுடைய உறவுகளை ஸ்திரமாகப் பேணியுள்ளது. இலங்கையின் நீண்டகால நலன்களும் இருதரப்பு உறவுக்கான சாத்திய நிலைகளும் இலங்கைத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் அனைத்தும் முழுமையாக நிறைவு செய்யப்படுவதன் மூலம் மட்டுமே உறுதி செய்யப்பட முடியுமென இந்தியா தொடர்ந்தும் நம்புகிறது;

1983-86 கால கட்டத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாட்டையே ஜனாதிபதி டி பி விஜேதுங்க மீண்டும் கைளாள்கிறார் என்றே தோன்றுகின்றது. அரசியல் தீர்வு தேவை என்பதை உதட்டளவில் மட்டும் கூறிக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான ராணுவ அரசியல் நிலைப்பாட்டை மேற் கொள்வதே இந்த நிலைப்பாடாகும்.

இவ்வாறான நிலைமைகளில் பெரும்பாலான அரசுகள் கடைப்பிடிக்கும் இரு பாதைக் கோட்பாட்டையே ஜனாதிபதி விஜேதுங்கவும் கடைப்பிடிக்கிறார். தமிழர்களுக்கு எதிராக தீவிரமான ராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதே முதலாவது நடவடிக்கையாகும்,

இரண்டாவது பாதையானது முதலாவது நடவடிக்கை வெற்றியளித்தால் எதிர்தரப்பினரை இணக்கம் ஒன்றுக்குள் வருவதற்கான நெருக்குதலைக் கொடுப்பதாக இருக்கும் இந்த நடவடிக்கை வெற்றியளிக்கக் கூடிய ஒன்றல்ல.

## தமிழருக்கு நியாயமானது கிடைக்க வற்புறுத்த வேண்டும்

ராஜீவ் காந்திக்கும், ஜெயவர்த்தனவுக்கும் இடையே 1987இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இது பல்லின பல மொழி பல மதங்களைக்கொண்ட ஒரு நாடாக இலங்கையை குறிப்பிட்டுள்ள அதேவேளை அதனுடைய ஐக்கியம் உறுதிப்படுத்தப்பட்டது;

இவ்விடயத்தில் இந்தியா ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது என்பதில் எந்தவிதமானசந்தேகமும் இருக்கக்கூடாது ஏனென்றால் இதற்கான ஒரே ஒரு மாற்று இலங்கை பிளவுபடுதலாகும்; ஆனால் இது இலங்கைக்கோ, இந்தியாவுக்கோ நல்லதல்ல;

மத அல்லது இன அடிப்படையில் ஏற்படும் ஒரு பிளவு இந்தியாவின் சொந்த நலன்களைப் பாதிப்பதாக அமையும் ஏனைய நாடுகளுடனான உறவுகளில் இந்த வாதத்தின் நியாயத்தன்மையை இந்தியா ஏற்றுக்கொண்டால் இந்தியக் குடியரசில் இதனைப் பிரயோகிப்பதிலும் கூட கேள்விக்கு இடமிருக்காது;

எனவே தமிழ்மக்களுக்கு நியாயமானவற்றைக் கொடுக்கவேண்டுமென இலங்கை அதிகாரிகளை நெருக்குவதாகவே இந்தியாவின் பணி இருக்கவேண்டும்; அதேவேளையில் தமிழர்களின் அபிலாசைகளுக்கான தன்னுடைய பொறுப்பை மேற்கொள்ளும் அதேவேளையில் வன்செயல்களையும், பயங்கரவாதத்தையும் ஆரம்பத்தில் தணித்து இறுதியில் முற்றாகக் கைவிடும் ஓர் அரசியல் போக்கை உருவாக்குவதற்கான தமிழர்களின் கருத்தை உருவாக்குமாறு இந்தியா தமிழர்களிடம் கூறவேண்டும். விடுதலைப்புலிகள் உட்பட தமிழர்களுடனான தொடர்புகளை மீள ஸ்தாபித்து பேச்சுவார்த்தைக்கான பாதையை மீண்டும் கொண்டுவர வேண்டும்;

---

சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர் தல்கள் எதிர்வரும் மே 26ஆம் திகதி நடைபெறும்: இத்தொகுதியில் தி.மு கவிற்கும் அ தி முகவிற்கும் சமபலம் இருப்பதால் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தி.மு.க இரண்டாக பிளவு பட்டிருப்பதால் கோபாலசாமி தலைமையிலான தி மு. க(வை) தரப்பும் இத்தேர்தலில் முழுமூச்சில் இறங்கவுள்

---

## 21 பொலிஸார் பணி நீக்கம்

திருச்சி துறையூர் அகதிகள் சிறப்பு முகாமிலிருந்து இம் மாதம் 11ஆம் திகதி மூன்று இலங்கை அகதிகள் தப்பிச் சென்றது தொடர்பாக 21 பொலிசாரும் ஒரு சப்இன்ஸ்பெக்டரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தப்பிச்சென்ற இந்த மூன்று இலங்கையரும் மீண்டும்கைது செய்யப்பட்டுள்ளனர்.

---

யேட் அட்டர்னி ஜெனரல் வெப்ஸ்ரர் கபில் முறைகேடுகள் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அர்கன்ஸாஸ் மாநிலத்தில் சட்டநிறுவனம் ஒன்றில் அவர் முன்பு பணியாற்றியது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு இடையே தமது பதவி விலகலை சமர்ப்பித்துள்ளார். அமெரிக்க அதிபர்பில்கிளிண்டனின்பாரியர்வ திருமதி ஹிலறி அந்த நிறுவனத்தின் ஒரு பங்குதாரர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்;

வைட் வார்ட்டர் விவகாரம் தொடர்பாக ஏற்கனவே சிக்கலில் இருக்கும் அதிபர் கிளிண்டனுக்கு இவரின் பதவி துறப்பு மேலும் தர்மசங்கடமான நிலைமையைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

---

## இந்திய - பிரிட்டன் ஒப்பந்தம் லண்டனில் கைச்சாத்து

(லண்டன்)

பரஸ்பரம் முதலீடுகளை ஊக்குவித்து பாதுகாப்புவழங்கும்ஒப்பந்தத்தில் பிரிட்டனும் இந்தியாவும் நேற்று கையெழுத்திட்டன. இந்தியாவின் சார்பில் லண்டனிலுள்ள இந்தியத்தூதுவர் எல்.எம். சிந்தியும்.பிரிட்டன் சார்பில் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட்டும் இவ்ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தான இவ் ஒப்பந்தம் பற்றி கருத்து வெளியிட்ட இந்திய அதிகாரி ஒருவர்கூறுகையில் இத்தகைய ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது இதுவே முதன் முறை எனத்தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் பத்தாண்டு காலம் நடைமுறையில் இருக்கும் எனவும், பரஸ்பரம் நம்பிக்கையைத் தோற்றுவிப்பதே இதன் நோக்கம் எனவும் மேலும் கூறப்படுகிறது;

---

## ஜனாதிபதி மாளிகையில் கத்தியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் கத்தியுடன் காணப்பட்ட நபர் ஒருவர் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

நகை வியாபாரியான இவர் இவ்வாறான வியாபாரிகளின் குழுவாக ஜனாதிபதி விஜேதுங்கவின் அனுமதி பெற்று தமது ஆபரணங்களை புதுவருட காலப்பகுதியில் இந்த உத்தியோகபூர்வ அலுவலகத்தின் அருகில் விற்பனை செய்யவிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கத்தியுடன் காணப்பட்ட இந்நபர் எவ்வாறு இரு பாதுகாப்பு ஊழியர்களால் உள்ளே அனுமதிக்கப்பட்டார் என்பது பற்றியும், அவரை உள்ளூர் அரசியல்வாதி ஒருவரா அழைத்து வந்தார் என்பது பற்றியும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது,

கண்டியில் வார இறுதியை கழிக்கும் ஜனாதிபதியை இந்நபர் சந்திக்கச் சென்ற வேளையிலேயே அவர் கத்தியுடன் காணப்பட்டதாக அறியப்பட்டு கைது செய்யப்பட்டார், இது குறித்து கண்டிப் பொலிசாரும் பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரிகளும் தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர்;

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா செல்லம்மா

தொல்புரம் டச் வீதியில் வசித்துவரும் காலஞ்சென்ற ஸ்ரேஷன் மாஸ்ரர் கந்தப்பர் செல்லப்பா என்பவரின் அன்பு மனைவி செல்லம்மா (மலாயன் பென்சனியர்) நேற்று (15-03-94) அதிகாலை 12.05 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பெருமையினார் (கல்வி அதிகாரி கோணாவம்பூர்), காலஞ்சென்ற சேனாதிராஜா (தபாலதிபர்), சிவராசா (சிவா ரேடேஸ் கொழும்பு), வயிரமுத்தாபிள்ளை பரமேஸ்வரி (பென்சனியர்), ஆறுமுகசாமி கண்மணி (பென்சனியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசமனரின் மாமியாரும், வ. தில்லைநடராஜா (கிராம சேவை அலுவலர் J/181), வ. சற்குணநாதன் (மின்சார பொறியியலாளர் - அபுதாபி), வ. ஜெகதீசன் (ஜேர்மனி), காயத்திரி (மாணவி - கொழும்பு), சேனாதிராஜா - செல்லப்பா (டாக்டர் இங்கிலாந்து), சேனாதிராசா தவத்துரை (இயந்திரப் பொறியியலாளர்), பெருமையினார் கிருஷ்ணராசா (விவசாயம் - வட்டக்கச்சி), பதுமநாபன் பவளம் (நுவரெலியா), சி. இரத்தினேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுவராஜன், அபிராமி, லஷ்ஷன், தாரணி, நந்தினி (மருத்துவ பீட மாணவி ரஷ்யா), லுகுமார் (மருத்துவ பீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பூட்டியும், தொல்புரம் காலஞ்சென்ற செல்லப்பா கந்தையா (கிராம சேவையாளர்), காலஞ்சென்ற டாக்டர் நடராஜா, செ. அப்பாத்துரை (இளைப்பாறிய நில அளவை கப்பிரிண்டன்) ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் 16-03-94 இன்று காலை 10.00 மணியளவில் தொல்புரம் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

தகவல்:

டச் வீதி,
தொல்புரம்.
(7757)

ஆ. கண்மணி - மகள்
வ. பரமேஸ்வரி - மகள்
செ. சிவராசா - மகன்

## கதிரேசு சரவணமுத்து

வேலணை 6ஆம் வட்டாரம் வங்களாவடியைச் சேர்ந்தவரும் தற்போது கொக்குவில் கோணாமலை வீதியில் வசித்து வந்தவருமாகிய கதிரேசு சரவணமுத்து நேற்று (15-3-94) காலமானார்.

இவர் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராஜா, காலஞ்சென்ற செல்லத்துரை அன்னபூரணம், அ. நாகபூரணம், கு. பாக்கியம், தேவராஜா (சின்னவன்), கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகலிங்கம் அரியகுட்டி, க. செல்லத்துரை நா. குணம், (கிருஸ்ணபிள்ளை பேரின்பன்) யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வள்ளியம்மை, சின்னக்குட்டி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10-00 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

(இ-8847) சின்னவன்

## மரண அறிவித்தல்கள்


### திருமதி இந்திராணி பரந்தாமன், செல்வி கௌரி பரந்தாமன்

திரு. பரந்தாமன் அவர்களின் அன்பு மனைவி திருமதி இந்திராணி, ஏகபுத்திரியாகிய செல்வி கௌரி ஆகியோர் 15-03-94 (செவ்வாய்) அன்று அகால மரணமானார்கள். இவர்கள் சிவாகரன், இரவீந்திரன், மனோகரன், லவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்புச் சகோதரியுமாவார்கள். இவர்களது பூதவுடல்கள் இன்று (16-03-94) காலை 10மணிக்கு இவர்களது இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ப. சிவாகரன்

20, இராசாவின்தோட்ட வீதி, (மகன், சகோதரன்)
யாழ்ப்பாணம். (7762) (சுராஜ் அப்பு)



### சூசைப்பிள்ளை மேசேஸ்பிலேந்திரன்

முன்னாள் தபால் திணைக்கள ஊழியரும், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்த சங்க உறுப்பினருமாகிய திரு. S. M பிலேந்திரன் 15-03-1994 அன்று அகால மரணமானார். இவர் காலம் சென்ற சூசைப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்புமகனும், ஜெறாட்மாகிலராவின் அன்புக்கணவரும், ஜோண் பப்ரீஸ்-றொபின் (பிரான்ஸ்), பீலிக்ஸ் டலஸ் (பிரான்ஸ்), மேரியூடிற் (திருமதி டன்ஸ்ரன் - மேகலா), மேரிஅஞ்சலா-சியாமளா (கொழும்பு), பெல்கின் (ஆண்டு7, யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சரஸ், செல்வராசா, கனகரத்தினம், இரட்ணசிங்கம், பாலசிங்கம், தனபாலசிங்கம், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம்டன்ஸ்ரனின் அன்பு மாமனாரும், சுதர்சினி (ஆண்டு5, யோண் பொஸ்கோ பாடசாலை) அன்புப் பேரனும், காலம்சென்ற சிங்கராஜர், முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், எலிசபத் லீலா, கொன்சன்ரைல், புஸ்பராசா ஆகியோரின் மைத்துனரும், காலம்சென்ற இராசமணி, பீற்றர், ஜோண் அவர்களின் பெறாமகனும், வி. ரி. ஆர். மோகனின் (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்) சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து, இன்று புதன்கிழமை (16-3-94) காலை 10-30 மணிக்கு யுவானியர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையின் பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லபடும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்

# சர்வசன வாக்கெடுப்பு முடிவினால் புலிகளின் தாக்குதல் அதிகரிக்கும்

## ஐலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ ரீதியாகத் தம்மைப் பலவீனமாக்க முடியாதென்பதைக் காட்ட புலிகள் தொடர் தாக்குதல்களை நடத்துவர் அரச அதிகாரிகள் மீண்டும் மீண்டும் தாம் புலிகளை அழித்து வடக்குக் கிழக்கில் அமைதி நிலையைத் தோற்றுவிப்போம் எனக் கூறுகின்றனர் அரசாங்கத்தில் உள்ள தலைவர்கள் தமது புலி எதிர்ப்புப் பேச்சுக்களால் தென்பகுதி வாக்காளர்களை கவரலாம் என உறுதியாக நம்புகின்றனர் இவ்வாறு ஐலண்ட் பத்திரிகையில் வெளியான செய்திக் கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

கிழக்கும் வடக்கும் இணைந்திருப்பது குறித்து கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது என்ற அரசின் முடிவு புலிகளின் தாக்குதல்களை அதிகரிக்கச் செய்யுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர் அண்மைக் கால பாதுகாப்பு, அரசியல் முன்னேற்றங்கள் குறித்து தாமும் நன்கறிந்திருப்பதாக படை உயர் அதிகாரிகள் கூறுகின்றனர் அதிகரிக்கும் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோமெனவும் அவர்கள் கூறுகின்றனர் என ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது

# தபால் திணைக்கள பரீட்சை விண்ணப்பம்

அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சை, 1994 நுண்ணாய்வுபரிசோதகர் I அஞ்சல் கணக்கு பரிசோதகர் தெரிவிற்கான போட்டிப் பரீட்சை, 1994, உதவி அஞ்சல் கணக்கு பரிசோதகர்கள் தெரிவுக்கான பரீட்சை - 1994 ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு தகுதிகளை உடைய, விரும்பும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 18-03-94 எனவும் மற்றைய இரு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களின் இறுதித் திகதி 21-03-94 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையால் மேற்படி பரீட்சைகளுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக தங்கள் விண்ணப்பங்களை பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடமாகாணம்) அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பப்படிவங்கள், மேலதிக அறிவுறுத்தல்கள் தேவைப்படுபவர்கள் தயவுசெய்து பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடமாகாணம்) அவர்களின் அலுவலகத்திற்குநேரில்சமுகம் தருமாறு பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடமாகாணம்) எஸ். எம். சேதுகாவலர் கேட்டுள்ளார்.

# எறிகணைவீச்சு குறித்து அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்காப் படையினர் நேற்றுநடாத்திய எறிகணைத் தாக்குதல் குறித்து அரசாங்கஅதிபர் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிறார்.

நேற்றைய தாக்குதலின் போது நான்கு பொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்துள்ளனர் என்றும் பொதுமக்கள் மீதான இத் தாக்குதலை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் அரச அதிபர் நேற்று நண்பகல் அனுப்பிய அவசர வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபரின் மேற்படி வானொலிச் செய்தி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு ஹமில்டன் வணசிங்காவுக்கு முகவரியிடப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ் நகரப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் பற்றிய விபரம் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி இதுகுறித்துகொழும்பிற்கு அறிவித்துள்ளார்.

(நி) (க)

### சீன

மும் அவர் ஜனாதிபதி விஜேதுங்கா, பிரதமர் ரணில் உட்

### மன்னார்

ஜெனரல் ஏ, எம், யூ. செனிவிரட்ன மன்னாருக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார் என தெரிவிக்கப்படுகிறது, இப்பகுதி பொலிசாருக்கு மேலும் போர் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சிறிலங்கா

ப்பதாவும், கொழும்பில் கட்டப்பட்ட தரையிறக்கும் கப்பலான எஸ். எல். என். எஸ் ரணகஜாவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இனப்பிரச்சினை

அவர் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறானால் இராணுவத் தீர்வும் அல்லாத ஆனால் சமாதானத் தீர்வும் அல்லாத ஒருவகை தீர்வையா அரசாங்கம் விரும்புகின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

### வீரச்சாவு

2-ம்லெப், சந்தசாமி (துரைச்சாமி யோகராஜா, மட்டக்களப்பு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### எறிகணை

ந்து வெடித்த இரண்டு எறிகணைகளால் அக் கோயில் சேதமடைந்துள்ளது.

(சி, 21, 90)

(ஜி-8847) சின்னவன்

## கணபதிப்பிள்ளை சண்முகம் (ஐயாத்துரை)

(புகையிரத ஓய்வுபெற்ற கங்காணி)

சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சண்முகம் (15-3-94) அன்று காலமாகிவிட்டார். இவர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், ஸ்ரீதரன், ஸ்ரீரதி, ஸ்ரீரஜனி (ஜேர்மனி), ஸ்ரீ குமுதினி (கொழும்பு), ஸ்ரீவதனி (ஜேர்மனி), ஸ்ரீ பாலதாஸ் (ஜேர்மனி), சத்தியஸ்ரீ ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்வநாயகம் (குவைத்), புஸ்பவதி, லோகநாதன் (ஜேர்மனி), சந்திரகாந்தன் ஆகியோரின் மாமனாரும், பபிதா, ரசக்கிதா, வினோப்ராஜ், பிரதா, துக்ஷா, மதிசூதனா, தர்சிகா (ஜேர்மனி), பிரதிலீப் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், மல்லாகத்தைச் சேர்ந்த நாகலிங்கம், காலஞ்சென்ற பூதத்தம்பி சின்னம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்; அன்னாரின் பூதவுடல் இன்று 2-00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்;

சந்தவளவு, — தகவல்:
சுன்னாகம் வடக்கு, — த. சந்திரகாந்தன்
சுன்னாகம். (7768) (மருமகன்)

## DR. G GURUNATHAN

(பிரதான வைத்திய நிபுணரும், நிர்வாக இயக்குனரும் ஜனவசம அட்டன் (Hatton)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் அட்டனில் ஜனவசமவில் கடமையாற்றிய வைத்திய நிபுணர் கு: குருநாதன் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் குருசாமியினதும் நாகரெத்தினத்தினதும் அன்பு மகனும், கமலநாயகியின் அன்பு கணவரும், கோண்டாவிலைச் சேர்ந்த சந்திரசேகரம் தம்பதிகளின் மருமகனும், சுந்திரலெட்சுமி, பரமேஸ்வரி, மங்களேஸ்வரி, சிவசங்கரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற குலசேகரம், வெள்ளியம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்; அன்னாரின் ஈமக்கிரியைகள் (16ஆம் திகதி) இன்று அட்டனில் நடைபெறும்;

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:
வட்டுக் கிழக்கு, — மங்களேஸ்வரி வெள்ளியம்பலம்
வட்டுக்கோட்டை; — (சகோதரி)

(7760)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்;

257, ஆஸ்பத்திரி வீதி, — தகவல்
யாழ்ப்பாணம்; — குடும்பத்தினர்

(7769)

## செல்வி சிவசங்கரன் சிவசக்தி

(கலைப்பீட மாணவி, 4 ஆம் வருடம், யா- பல்கலைக்கழகம்)



சிவசங்கரன் சிவசக்தி 14-03-94 அன்று அகால மரணமானார். அன்னார் சிவசங்கரன் (முன்னைநாள் சாறி எம்போரியம் ஊழியர், சின்னத்துரை அன் பிறதர்ஸ் காசாளர்), இராசம்மாவின் அன்பு மகளும், சிவராசா, கணேசராசா (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி), சண்முகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவனேஸ்வரி, பிரேமசௌரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேனுகன், யதீஸ்வரன், ஆரணி ஆகியோரின் மாமியாருமாவார்;

ஈமக்கிரியைகள் அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 16-03-94 (இன்று) காலை 10 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசன் களஞ்சியம் — கணேசராசா
சந்தை உட்புறம், — (சகோதரன்)
திருநெல்வேலி.

(7764)

சன

மும் அவர் ஜனாதிபதி விஜேதுங்கா, பிரதமர் ரணில் உட்பட பல பிரமுகர்களை சந்தித்ததையும் ஆயுதக்களஞ்சியசாலை அமைப்பது தொடர்பாக இருந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவில் ஆயுதக்களஞ்சியசாலையை சீனா அமைக்க இடமளிப்பதன் மூலம் இந்திய-சீன உறவில் விரிசலை உருவாக்க சிறிலங்கா காரணமாக இருக்க வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டும் என இடதுசாரி அரசியல் பிரமுகர் ஒருவர் கூறியதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது;

### பிரச்சினையை

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்கள் முடிந்திருப்பதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக புதிய தாக்குதலை ஆரம்பிக்க இராணுவம் திட்டம் வகுத்து வருகிறது என்றார்,

தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க நிறுத்தப்பட்டிருந்த இராணுவம் மீண்டும் தமது பழைய இடங்களுக்கு திரும்பி விட்டதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளால் பூநகரி முகாம் தாக்கப்பட்டபின் அப்படைமுகாம் குறுகிவிட்டது, அங்கு இன்னமும் கடற்படைத்தளம் அமைக்கப்படவில்லை; ஆனால் அங்கு எதிர்காலத்தில் கடற்படைத்தளம் அமைக்கப்படுமா என்பது குறித்து எதுவும் கூற முடியாது.

கிளாலி கடற்பரப்பினூடாக பயணம்செய்ய விதிக்கப்பட்ட தடை இன்னமும் நீக்கப்படவில்லை, படையினர் எந்த இடத்தையும் விட்டுக்கொடுக்கவில்லை; இப்பொழுதும் அங்கு தாக்குதல்கள் தொடர்கின்றன, இரவில் பயணம் செய்பவர்களை இனம்காண முடியாது. எனவே பொதுமக்களும் தாக்கப்படுகின்றனர் எனவும் கெமுனு குலதுங்க தெரிவித்தார்

காரிகள் தெரிவித்தனர். (சி,21,90)

## கண்ணீர்ப் பூக்கள்

செல்வி

# சிவசக்தி

பல்கலைக்கழக கல்வியைப் பெற்றுப்
படிப்பினில் உயர்ந்த
சிவசக்தி — நீ
ஆலாய்ப் படர்வாய்
அறுகாய்த் தொடர்வாய்
என்று
எண்ணி இருந்த உன் அன்புப் பெற்றார்
சகோதரங்கள்
அனைவரும் ஏங்க அழுது புலம்ப,
எங்கே, நடந்தாய்?
ஏன் நீ நடந்தாய்?
உனது மரணம் மிகவும் கொடியது
எங்கள் துயரம் இரட்டிப்பாக,
இதயத்தாலே அழுது புலம்பும்
திருநெல்வேலி வர்த்தகர்களும்
நண்பர்களும் நாமும் சிந்தும் கண்ணீர்ப் பூக்கள்
உன்பாதங்களிலே
அர்ச்சிக்கப்படுக;

எமது நண்பர் திரு. கணேசராசாவின் அன்புச் சகோதரியின் அகால மரணச் செய்தியைக் கேட்டு நாம் பெரிதும் துன்பமடைகிறோம். துன்பத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து போயிருக்கும் செல்வி சிவசக்தியின் குடும்பத்தினரின் துயரங்களில் நாமும் பங்குகொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வர்த்தகர்கள்
திருநெல்வேலி சந்தி

(7765)